# உதயன்

சுடர் : 37 கதிர் : 139 | புதன்கிழமை | சித்திரை 01 ஆம் நாள் 14 ஏப்ரல் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 24 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


வாசகர்கள், விளம்பரதாரர்கள், விநியோகத்தர்கள் மற்றும் அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் **உதயனின் சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**




# அதியுச்ச அதிகாரத்துக்காக கடுமையாக உழைப்போம்!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 14

உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் கொடுத்த பல வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் அரசு இன்று தத்தளிக்கின்றது. இது நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் நல்லதல்ல. விசேடமாக இந்த ஆட்சிக்கு உகந்ததல்ல. தமிழ் மக்கள் கோருவது, பிளவுபடாத ஒருமித்த நாட்டுக்குள் போதிய அதியுச்ச அதிகாரப் பகிர்வையே. அதற்காக ஒன்றுபட்டு உழைப்போம்.

23 ➤



# மழைக்கு சாத்தியம்

யாழ்ப்பாணம், ஏப்.14

வடக்கு மாகாணத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதிவரை மழையுடனான காலநிலைக்கு வாய்ப்புள்ளது என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் தற்போது காலை வேளைகளில் வெப்பமான காலநிலை காணப்படுகின்றது. நாட்டின் வளிமண்டலத்தின் கீழ் காற்ற

23 ➤

# விபத்தில் சிக்கி குடும்பத் தலைவர் உயிரிழப்பு

சாவகச்சேரி, ஏப். 14

புதுவருடத்தைக் குடும்பத்தினருடன் கொண்டாடுவதற்காக சென்ற குடும்பத்தலைவர் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார். இந்த விபத்து நேற்று

23 ➤

# ஜனாதிபதி கோத்தாபய ஹிட்லராக மாறவேண்டும்!

## உசுப்பேற்றுகிறார் திலும் அமுனுக

கொழும்பு, ஏப். 14

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச ஹிட்லர் போன்று செயற்படவேண்டும் என்பதையே அவருக்கு வாக்களித்த 69 லட்சம் பேர் எதிர்பார்க்கின்றனர் என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: கோத்தபாய ராஜபக்ச ஜனாதிபதியானால்

23 ➤



Ambassador Holger Seubert
@GermanAmbColo

I'm hearing claims that "a Hitler" could be beneficial to Sri Lanka today. Let me remind those voices that Adolf Hitler was responsible for human suffering and despair beyond imagination, with millions of deaths. Definitely no role model for any politician!

12:54 PM · Apr 13, 2021 · Twitter for Android

# அரசியல்வாதி எவருக்கும் ஹிட்லர் முன்மாதிரி அல்லர்

## திலும் அமுனுகமவுக்கு ஜேர்மனி தூதுவர் "குட்டு"

கொழும்பு, ஏப்.14

ஜேர்மனியின் சர்வாதிகார ஆட்சியாளர் 'அடொல்ப் ஹிட்லர்' எந்தவொரு அரசியல்வாதிக்கும் முன்மாதிரியானவர் அல்லர் என்று தெரிவித்துள்ளார் இலங்கைக்கான ஜேர்மனி தூதுவர் ஹோல்கர் செயுபேர்ட். தனது டுவிற்றர் பக்கத்தில் நேற்றுப் பதிவேற்றியுள்ள பதிவொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

23 ➤

# நல்லூரில் கொரோனாவால் மூதாட்டி சாவு

யாழ்ப்பாணம், ஏப்.14

யாழ்ப்பாணம், நல்லூரைச் சேர்ந்த 81 வயதுப் பெண் ஒருவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார். செட்டித் தெருவில் வசிக்கும் இந்த மூதாட்டி வீட்டில் உயிரிழந்த நிலை

23 ➤

# பழிவாங்கும் நோக்கில் பொய்க் குற்றச்சாட்டாம்!



## சூக்காவின் 50 பக்க ஆவணத்தை நிராகரித்தார் சவேந்திர சில்வா

கொழும்பு, ஏப். 14

என்னைத் திட்டமிட்டுப் பழிவாங்கும் வகையில் என் மீது பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி 50 பக்க ஆவணக் கோவையை, சர்வதேச உண்மை மற்றும் நீதிக்

23 ➤

# விகிதாசார முறைமையில் மாகாண சபைத் தேர்தல்!

## ரோஷான் ரணசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.14

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலை விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் நடத்த அரசு திட்டமிட்டுள்ளது. 70-30 என்ற விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் தேர்தல் நடத்தப்படும் என்று இராஜாங்க அமைச்சர் ரோஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் இராஜாங்க அமைச்சர், முன்

23 ➤

# புத்தாண்டு களியாட்டத்தில் கட்டுப்பாடுகளை மறவாதீர்

## வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஏப்.14

தமிழ் சிங்கள புத்தாண்டுக் கொண்டாட்டங்களின்போது சுகாதார நடைமுறைகளை அனைவரும் பின்பற்ற வேண்டும். ஒவ்வொருவரும் அதை உணர்ந்து செயற்படவேண்டும்.

23 ➤

# வட மாகாணத்தில் 20 பேர் தொற்றுடன் அடையாளம்

யாழ்ப்பாணம், ஏப்.14

வடக்கு மாகாணத்தில் நேற்று 20 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. அவர்களில் 18 பேர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில்

23 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த மக்களின் ஒத்துழைப்பும் அவசியம்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கோரிக்கை



கொழும்பு, ஏப். 14

பாதுகாப்புத் தரப்பினராலும், புலனாய்வுப் பிரிவினராலும் மாத்திரம் அடிப்படைவாதத்தை இல்லாதொழித்து தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது. அடிப்படைவாதம் தொடர்பில் நாட்டு மக்கள் பாதுகாப்புத் தரப்பினருக்கு உரிய தகவல்களை வழங்க வேண்டும் இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இஸ்லாமிய அடிப்படைவாதச் செயற்பாடுகளை இல்லாதொழிக்க நாட்டு மக்கள் பாதுகாப்புத் தரப்பினருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அடிப்படைவாதக் கொள்கை எந்த வழியில் தோற்றம் பெற்றாலும் அதற்கு இடமளிக்க முடியாது.

ஐ.எஸ்.ஐ.எஸ். வாஹப் வாதம், சல்பி வாதம் என மதம் மற்றும் கொள்கையை அடிப்படையாகக்கொண்ட அடிப்படைவாதம் காணப்படுகிறது. உருவ வழிபாட்டுக்கு இவர்கள் முழுமையாக எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றனர். தங்களின் மதக் கொள்கையைப் பரப்புவதற்கு பிற மதங்களைக் கொல்வது சரி என்ற நிலைப்பாட்டில் உள்ளனர்.

அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்க அரசு சிறந்த நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. இதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பு அத்தியாவசியமானது. தீவிர மதக் கொள்கையை உடையவர்கள் ஒரு கட்டத்தில் அடிப்படைவாதிகளாக மாற்றமடைகின்றனர். இறுதியில் பயங்கரவாதிகளாகத் தங்களை அடையாளப்படுத்திக்கொள்கின்றனர். ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் இவ்வாறான பின்னணியில் நடத்தப்பட்டது. எனவே அடிப்படைவாதத் தாக்குதல்கள் நாட்டில் எதிர்காலத்தில் இடம்பெறாத அளவுக்குக் கடினமான பல தீர்மானங்களை எடுக்க நேரிட்டுள்ளது - என்றார். (ம4)

### முதியவர் திடீர் சாவு; நாவற்குழியில் சம்பவம்

சாவகச்சேரி, ஏப். 14

இரவு உணவு உண்டுவிட்டு படுக்கைக்குச் சென்ற 80 வயது முதியவர் காலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று நாவற்குழியில் நடந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த சுப்பையா குணரத்தினம் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். முதியவரின் இறப்புத் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு, பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். (ப9)

### புகழ்பூத்த ஆங்கில ஆசான் காலமானார்



யாழ்ப்பாணம், ஏப்.14

யாழ்ப்பாணத்தில் புகழ்பூத்த ஆங்கில ஆசிரியர் சின்னத்தம்பி சுப்பிரமணியம் நேற்றுமுன்தினம் காலமானார். அவருக்கு வயது 77.

வடமராட்சி, புலோலியைச் சேர்ந்த இவர், புலோலி, வடமராட்சி, யாழ்ப்பாணக் குடாநாடு, தமிழ்நாடு எனப் பல இடங்களில் கற்பித்துள்ளார். இவரிடம் கற்றவர் மாணவர்கள் பலர் தற்போதும் பெரும் பதவிகளை வகித்து வருகின்றனர். தமிழ்நாடு, லோயலாக் கல்லூரியிலும் இவர் ஆங்கிலப் பேராசிரியராக சேவையாற்றியுள்ளார். ஆங்கிலம், லத்தின், பிரென்ஞ், டொச் ஆகிய மொழிகளிலும் இவர் புலமைத்துவம் கொண்டவர்.

இவரது உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்றுமுன்தினம் சுகவீனம் காரணமாக காலமானார். அவரது இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றன. (319)



# இலங்கை - சீனா உறவு மேலும் வலுப்படுத்தப்படும்

## புத்தாண்டு வாழ்த்தில் சீனத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 14

இலங்கை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின் பிங் ஆகிய இரு நாட்டு தலைவர்களும் உருவாக்கிய முக்கிய உடன்பாடுகளை, வழிகாட்டலாகக் கொண்டு சீன- இலங்கை ஒத்துழைப்புக் கூட்டுறவைத் தொடர்ந்து முன்னெடுத்து, மேலும் உயர் நிலைக்கு செல்ல முயற்சிகள் மேற்னகொள்ளப்படும் என்று இலங்கையிலுள்ள சீனத் தூதுவர் கீய் ஷென் ஹோங் தெரிவித்தார்.

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

2021ஆம் ஆண்டு சிங்கள - தமிழ் புத்தாண்டை முன்னிட்டு இலங்கையிலுள்ள சீனத் தூதரகம், சீனத் தொழில் நிறுவனங்கள் மற்றும் இலங்கை வாழ் சீனர்களின் சார்பில் தனிநபர் பெயரில் இலங்கையின் பல்வேறு இன மக்களுக்கும் சீன - இலங்கை உறவுமீது அக்கறை செலுத்தும் நண்பர்களுக்கும் உளமார்ந்த மற்றும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள் தெரிவிக்கிறேன். கடந்த ஓராண்டில் சீனா - இலங்கை இடையே பரஸ்பர அரசியல் நம்பிக்கை இடைவிடாமல் மேம்பட்டு வந்துள்ளது. சீன ஜனாதிபதி ஜி ஜின் பிங் மற்றும் இலங்கை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆகியோர் இருமுறை தொலைபேசியில் உரையாடினர். இதனிடையில் தொலைநோக்குப் பார்வையில் சீன - இலங்கை உறவுக்கு, வழிகாட்டி இரு நாட்டு ஒத்துழைப்புகள் குறித்து முக்கிய உடன்பாடுகளை உருவாக்கியுள்ளனர். பலதரப்பு அரங்குகளில் சர்வதேசத்தின் நேர்மை மற்றும் நீதியையும் இரு தரப்புகளின் கூட்டு நலன்களையும் பேணிக்காக்கும் வகையில் நாங்கள் பலமுறை ஒற்றுமை மற்றும் ஒருங்கிணைப்புடன் செயல்பட்டுள்ளோம்.

கடந்த ஓராண்டில் இரு நாடுகளும் ஒன்றிணைந்து கொவிட்19 நோய்த் தொற்றை எதிர்த்து போராடியுள்ளன. இதனிடையில் இலங்கையின் பல்வேறு துறையினர்களும் அளித்த உறுதியான ஆதரவுகளை சீன மக்கள் மறக்க மாட்டார்கள். சீனா, இலங்கைக்கு பொருள்கள் மற்றும் தடுப்பூசிகளை நன்கொடையாக அளித்ததோடு நிதி ஆதரவுகளையும் வழங்கியுள்ளது. கடந்த ஓராண்டில் பல்வேறு துறைகளில் நடைமுறைக்கு ஏற்ற ஒத்துழைப்புகளை இரு நாடுகளும் முன்னெடுத்துச் சென்றுள்ளன. பொருளாதார வளர்ச்சியின் புதிய உந்து சக்தியாக விளங்கும் கொழும்பு துறைமுக நகரம், அம்பாந்தோட்டை துறைமுகம் ஆகியவற்றின் சாதனைகள் தெளிவாகக் காணப்படுகின்றன. சீன - இலங்கை தண்ணீர் தொழில்நுட்பத்துக்கான கூட்டு ஆய்வு மையம், தேசிய சிறுநீரக நோய் மருத்துவமனை உள்ளிட்ட மக்கள் வாழ்க்கை நலன் சார்ந்த சில செயற்றிட்டங்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. மற்றும் சில பயன்பாட்டுக்கு வர உள்ளன. இவை இலங்கையின் பொருளாதாரச் சமூகத்தின் நிலையான வளர்ச்சிக்கு வலுவான ஆற்றலை வழங்கும் - என்றார். (மப)

### கொரோனாவால் 602 பேர் சாவு

கொழும்பு, ஏப். 14

கொரோனாத் தொற்றால் இலங்கையில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 602ஆக அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இறுதியாக நாட்டில் 4 உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன என்றும் திணைக்களம் மேலும் குறிப்பிட்டது. (ப-4)

# கடும் மழை காரணமாக எள்ளுச்செய்கை அழிவு

## விவசாயிகள் கவலை

யாழ்ப்பாணம், ஏப். 14

வலி. மேற்கு மற்றும் வலி. தென்மேற்கில் கடந்த மூன்று நாள்களாக பெய்துவரும் கடும் மழையால் நல்ல விளைச்சலை தரக்கூடிய நிலையில் இருந்த எள்ளுப் பயிர்கள் அழிவடைந்துள்ளன. சில இடங்களில் முழுமையான அழிவையும் அவை எதிர்கொண்டுள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

கடந்த வருடம் பெய்த கடும் மழையால் பெரும்போகச் செய்கைகளை விவசாயிகள் இந்த வருடம் எள்ளு, உழுந்து, பயறு மற்றும் சிறுதானியச் செய்கை ஆகியவற்றை முழுமையாக மேற்கொண்டனர். இவ்வருடம் சிறுபோக எள்ளுச் செய்கை வலி. மேற்கு வலி. தென்மேற்கு விவசாயிகளுக்கு நல்ல பயனை தரக்கூடிய நிலையில் இருந்தது. ஆனால் கடந்த மூன்று நாள்களாகப் பெய்த மழையால் அவை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் அழிவடைந்த பெரும்போகத்துக்குரிய இழப்பீடு இதுவரையில் விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-ப-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்சக்களே 'கிங்ஸ்' ஏனையோர் 'டம்மிகள்'

## ஆளும் கூட்டணியின் நிலைமை இதுதான் என்கிறது எதிர்க்கட்சி

**கொழும்பு, ஏப். 14**

**ஆளும் கூட்டணிக்குள் ராஜபக்சக்கள்தான் சகல பொறுப்புக்களையும் வகிக்கின்றார்கள். அங்குள்ள ஏனையோர் ஒப்புக்குச் சப்பாணிகளாகவே இருக்கின்றார்கள். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுச நாணயகார தெரிவித்தார்.**



கொழும்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: சிறிலங்கா பொதுஜன பெரமுன பல கட்சிகளின் கூட்டு. அவர்கள் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அமைத்து ஓராண்டு கூட கடக்கவில்லை.

சிறிலங்கா பொதுஜன பெரமுன தவிர்ந்த அந்தக் கூட்டில் உள்ள ஏனைய 11 கட்சிகள் ஒன்றிணைந்து தமக்குள் தனியான சந்திப்பை நடத்தியுள்ளன. அவர்கள் சந்திப்பில் என்ன பேசினார்கள் என்பது எமக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் இந்தச் சந்திப்பின் ஊடாக தெளிவான செய்தியைச் சொல்லியுள்ளார்கள். நாட்டு மக்கள் அந்தச் செய்தியைப் புரிந்து கொள்ளவேண்டும். ஆளும் கூட்டணிக்குள் மோதல் வெடித்து விட்டது. ஜனாதிபதி கோத்தாபய கிராமங்களுக்குச் சென்று மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதை விட தனது பிரச்சினைகளை அவர்களுக்குள் சொல்லிக் கொண்டிருக்கின்றார். தான் நடத்தும் இந்தக் கிராமத்து உரையாடல் தொடர்பில் ஆராய்வதற்காக குழு அமைத்துள்ளார். அதன் தலைமை நாமல் ராஜபக்சவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. ஆளும் கூட்டணிக்குள் எல்லாமே ராஜபக்சக்கள்தான். ஏனையோர் அதிகாரமில்லாதவர்கள் என்பதைத்தான் சொல்லாமல் செயலால் உணர்த்துகின்றனர், என்றார். (ஒ.இ,319)

# பொருள்கள் கொள்வனவில் நூதன மோசடி அதிகரிப்பு

## வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு,ஏப்.14

மிக நுட்பமான முறையில், பொருள்களைக் கொள்வனவு செய்யும் மோசடிச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதால், வர்த்தகர்கள் அவதானத்துடன் அவற்றை விற்பனை செய்ய வேண்டும் என்று பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

பிரதான வெளிநாட்டுத் தூதரகங்களில் இருந்து அழைப்பதைப் போன்று, தொலைபேசி ஊடாக இந்த மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

கொழும்பின் முன்னணி விற்பனை நிலையங்களில் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக, போலியான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

குறித்த மோசடியில் ஈடுபடுவோர் பிரதான விற்பனை நிலையங்களுக்கு அழைப்பை எடுத்து, தாம் வெளிநாட்டுத் தூதரகங்களில் இருந்து பேசுகின்றோம் எனத் தெரிவித்து, தமக்குத் தேவையான பொருள்களின் விபரங்களைக் கூறியுள்ளனர்.

கொழும்பின் இரு பிரதான தொலைபேசி விற்பனை நிலையங்களிடம் இவ்வாறு மோசடியில் ஈடுபட்டோர், 4.7 மற்றும் 2.9 மில்லியன் ரூபா பெறுமதியான பொருள்களைப் பெற்றுள்ளனர். அதற்காக இரு காசோலைகளையும் வழங்கியுள்ளனர். அவை போலியாகத் தயாரிக்கப்பட்டவை என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவ்வாறான நூதன மோசடியால் பாதிக்கப்படுவோர் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கோ அல்லது இலக்கம் 182, எல்விட்டிகல மாவத்த, கொழும்பு 8 எனும் முகவரியில் உள்ள மோசடி தடுப்புப் பணியகத்துக்கோ சென்று முறையிட முடியும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ப-4)

# தொலைபேசி ஈ.எம்.ஐ. இலக்கங்கள் இணையத்தளத்தில் வெளியீடு

கொழும்பு,ஏப்.14

கொள்ளையடிக்கப்பட்ட தொலைபேசிகளின் ஈ.எம்.ஐ. இலக்கங்கள் பொலிஸ் தலைமையகத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. எனவே ஒருவர் பயன்படுத்தும் தொலைபேசிகள் மற்றும் புதிதாக தொலைபேசியை கொள்வனவு செய்தவர்கள், தொலைபேசியின் ஈ.எம்.ஐ. இலக்கத்தை, வெளியிடப்பட்டுள்ள இலக்கங்களுடன் ஒப்பிட்டு உறுதி செய்து கொள்ளுமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இதன் மூலம் தான் கொள்வனவு செய்துள்ள தொலைபேசி சிக்கலுக்கு உரியதல்ல என்பதை உறுதி செய்ய முடியும்.

கொள்ளையடிக்கப்பட்ட தொலைபேசிகளை விற்பனை செய்யும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ள நிலையில், பொலிஸார் இந்த விசேட நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். (ப-4,319)

# பலமுனை எதிர்ப்புக்களையடுத்து பின்வாங்குகின்றாரா டக்ளஸ்?

யாழ்ப்பாணம், ஏப். 14

இந்திய மீனவர்கள் கட்டணம் செலுத்தி இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதி வழங்கும் திட்டம் இறுதிப்படுத்தப்படவில்லை. அது வெறும் 'யோசனையே' தவிர 'முடிவல்ல' என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

'அத்துமீறி எல்லைதாண்டி சட்டவிரோத தொழில் முறைகளை பயன்படுத்துகின்ற இந்திய கடற்றொழிலாளர் விவகாரம் தொடர்பாக பல்வேறு வழிமுறைகள் பரசீலிக்கப்பட்டு வருகின்றனவே தவிர தீர்மானங்கள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

குறித்த யோசனையை சிலர் மிகைப்படுத்தி தவறாகச் சித்தரித்து வருகின்றனர்' என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டுள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

'இந்திய மீனவர்கள் எமது நாடு உள்ளிட்ட சர்வதேச நாடுகளால் தடை செய்யப்பட்ட சட்டவிரோத தொழில் முறையைப் பயன்படுத்தி எமது எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடிக்கின்றனர். இதனை அனுமதிக்க முடியாது. இந்த நெடுநாள் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும்.

அதற்காக பல்வேறு யோசனைகள் முன்மொழியப்பட்டுள்ளன. அதில் ஒன்றுதான் கட்டணம் செலுத்தி மீன்பிடிக்க அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறை. இது இறுதி முடிவல்ல. வடக்குக் கடற்றொழிலாளர்கள் ஏற்றுக் கொள்ளும் முடிவையே நானும் எடுப்பேன்' என்றார் டக்ளஸ். (ஒ.இ)



# தே.எண்ணெய்யின் ஆய்வு முடிவு புத்தாண்டுக்கு பின்னரே

## நுகர்வோர் அதிகார சபை தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.14

புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயனம் அடங்கிய தேங்காய் எண்ணெய்யைக் கண்டறிவதற்காக, சந்தைகளில் பெறப்பட்ட மாதிரிகளின் ஆய்வு முடிவுகள் புத்தாண்டுக்குப் பின்னரே வெளியிடப்படும் என்று நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஆய்வுக்காக 30 மாதிரிகள் பேராதனைப் பல்கலைகழகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, அஃப்ளாடொக்சின் இரசாயனம் அடங்கியுள்ளமை உறுதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் அடங்கிய கொள்கலன்கள் ஏற்றப்பட்ட 'பாபரா' என்ற கப்பல், கொழும்பு துறைமுகத்தில் இருந்து மலேசியா நோக்கிப் புறப்பட்டுள்ளது. (ப-4)

# இலங்கைக்கு வருகிறார் சீனப் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, ஏப். 14

சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வீபெங் உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு இலங்கை வரவுள்ளார். சீனப் பாதுகாப்பு அமைச்சரின் பயணம் உறுதியானபோதிலும் திகதி விவரம் உத்தியோகப்பூர்வமாக வெளிவரவில்லை. எனினும் தமிழ், சிங்கள புத்தாண்டுக்குப் பின்னர் அவர் வருவார் என அறியமுடிகின்றது.

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் அரச உயர்மட்ட பிரதிநிதிகளுடன் சீனப் பாதுகாப்பு அமைச்சர் பேச்சு நடத்தவுள்ளார்.


சீன கம்யூனிஸ்கட்சியின் உயர்மட்ட பிரமுகர் யெங் ஜியேச்சி கடந்த ஒக்ரோபர் மாதம் உயர்மட்ட குழுவுடன் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்தார். அதன்பின்னர் சீனாவின் உயர்மட்ட அதிகாரியொருவர் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் 2ஆவது சந்தர்ப்பம் இதுவாகும். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இந்தியாவுக்கு இந்த மாத இறுதியில் பயணம் மேற்கொள்ளவுள்ளார். அதற்கு முன்னதாக சீனப் பாதுகாப்பு அமைச்சரின் சந்திப்பு நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ.44)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேட பூசையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், ஏப். 14
உலகில் வாழும் அனைத்து மக்களும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய்களிலிருந்தும் மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி நாளை வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு மண்டுவில் இலஞ்சி ஆரணியம் குமரகோட்டம் முருகமூர்த்தி ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.
வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ தே.கௌரிசங்கரக்குருக்களின் அருளாசி உரையும், வேதபாராயணமும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ய)



வவுனியா பூவ ரசன்குளம் மணியர்குளம் கிராமத்தில் வசிக்கின்ற நாகமணி இராசேந்திரம் (வயது-71) என்பவருக்கு சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு சக்கர நாற்காலி ஒன்று, லண்டனில் வசிக்கின்ற ஸ்ரீவாணி இளங்கோவன் மற்றும் கந்தப்பிள்ளை திலீபனின் நிதி அனுசரணையுடன் நேற்று வழங்கப்பட்டது. (ய-222)


## இலங்கையின் தடை அறிவிப்பால் தமிழகத்தில் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, ஏப்.14
பயங்கரவாதக் குழுக்களைத் தடை செய்யும் நடவடிக்கையை இலங்கை ஆரம்பித்துள்ள நிலையில், தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் உள்ள விமான நிலையங்களில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது என்று 'தி ஹிந்து' செய்தி வெளியிட்டுள்ளது.
இது தொடர்பாக அனைத்து மாநில ஆணையர்கள் மற்றும் பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
இலங்கையிலிருந்து மத அடிப்படைவாதிகள் விமானம் அல்லது கடல் வழியாக சட்ட விரோதமாகக் குடியேறுவதற்கான வாய்ப்பு உள்ளது.
அதனால் மத அடிப்படைவாதிகள் தமிழ்நாட்டில் தளம் அமைப்பதைத் தடுக்க, உளவுத்துறையைப் பலப்படுத்தவும், மாநிலம் முழுவதும் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தவும் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.
இலங்கையில் தீவிரவாத நடவடிக்கைகள் தொடர்பாக அல்கொய்தா, ஐ.எஸ். உள்ளிட்ட 11 குழுக்களைத் தடை செய்ய சட்டமா அதிபர் அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-4)

# முல்லையில் கால்நடைகள் தொல்லை; சிறுபோக செய்கை பாதிக்கும் அபாயம்

## விவசாயிகள் சுட்டிக்காட்டு

**முல்லைத்தீவு, ஏப். 14**
**முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது சிறுபோக நெற்செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகள், கால்நடைகளின் தொல்லையை எதிர்கொண்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**



இது தொடர்பில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்ததாவது;
கால்நடைகளைக் கட்டுப்படுத்துவது என்று மாவட்டத்தில் இடம்பெறும் சிறுபோகக் கூட்டங்களில் முக்கிய தீர்மானமாக எடுக்கப்பட்டது. கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு என்றே கமக்கார அமைப்பு ரீதியாக நபர்கள் நியமிக்கப்பட்டார்கள். எனினும் கால்நடைகள் கட்டுப்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. சிறுபோகம் மேற்கொள்ளப்பட்டு. தற்போது 20 நாள்கள் கடந்துள்ள நிலையில். அந்த நெற்பயிர்களை கால்நடைகள் மேய்கின்றன. இவற்றைக் கட்டுப்படுத்துவதில் கமக்கார அமைப்புகள் அக்கறை செலுத்துவதில்லை. பயிர்ச் செய்கை நிலங்களில் இருந்து குறைந்தது 500 மீற்றர் தூரத்தில் தமது கால்நடைகளை, கால்நடை வளர்ப்பாளர்கள் மேய்ச்சலில் ஈடுபடுத்தாமல் வயலின் வாய்க்கால்களில் மேய்ச்சலில் ஈடுபடுத்துவதால் கால்நடைகள் வயல்களில் இறங்கி மேய்ச்சலில் ஈடுபடுகின்றன. இது தொடர்பாக கமக்கார அமைப்புகள் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட பலரிடம் கோரிக்கை விடுத்தும் எந்தப் பயனும் இதுவரை கிடைக்க வில்லை - என்றனர். (ப-13)

## குருதிக் கொடை நிகழ்வு

கொக்குவில் பொற்பதி இந்து விளையாட்டுக்கழ கத்தினால் குருதிக்கொடை வழங்கும் நிகழ்வு இன்றையதினம் நடைபெறும். குறித்த குருதிக்கொடை நிகழ்வு பொற்பதி அறிவாலயம், பொற்பதி, கொக்குவில் என்ற இடத்தில் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும் என நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.
இதன்போது குருதிக்கொடை வழங்குபவர்களின் சேவையை கௌரவித்து பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ய)



யாழ்ப்பாணம் அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் கல்வி கற்கும் 305 மாணவர்களுக்கு, முன்னாள் கல்லூரி ஆசிரியரான கா. ராஜேஸ்வரியால். கடந்த சனிக்கிழமை கல்லூரி மண்டபத்தில் புத்தகப்பை மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ய-63)

# நெளுக்குளம் அஞ்சல் அலுவலகத்தில் தண்டப்பணம் செலுத்தவே முடியாது

## சாரதிகள் அலைச்சல்

வவுனியா, ஏப். 14
வவுனியா நெளுக்குளம் அஞ்சல் அலுவலகத்தில் போக்குவரத்து தண்டப்பணம் செலுத்த முடியாததால் சாரதிகள் பெரும் அலைச்சல்களை எதிர்கொண்டுள்ளனர்.
போக்குவரத்து விதிமுறைகளை மீறுகின்ற சாரதிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் மேற்கொள்வதற்குப் பதிலாக பொலிஸாரால் தண்டப்பணம் விதிக்கப்பட்டுகின்றது. பொலிஸாரால் வழங்கப்படும் தண்டப்பத்திரத்தை எடுத்துச் சென்று அஞ்சல் அலுவலகங்களில் தண்டப்பணம் செலுத்தப்பட வேண்டும்.
வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட நெளுக்குளம் அஞ்சல் அலுவலகத்துக்கு தண்டப்பணம் செலுத்தச் சென்றவர்களை அங்கு தண்டப் பணம் செலுத்த முடியாது எனவும் வவுனியா பிரதான அஞ்சல் அலுவலகத்துக்குச் சென்று தண்டப் பணத்தைச் செலுத்துமாறும் அஞ்சல் அலுவலக அதிகாரி திரும்பியனுப்பியுள்ளார் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இதனால் நெளுக்குளம் அஞ்சல் அலுவலகத்திலிருந்து சுமார் 5 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள வவுனியா பிரதான அஞ்சல் அலுவலகத்துக்குச் சென்று தண்டப் பணத்தைச் செலுத்தி மீண்டும் 5கிலோ மீற்றர் தூரம் பயணித்து நெளுக்குளம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற வேண்டிய நிலை சாரதிகளுக்கு ஏற்பட்டுள்ளது. அனைத்து அஞ்சல் அலுவலகங்களிலும் போக்குவரத்து தண்டப்பணம் செலுத்துவதற்குரிய வசதிகள் காணப்படுகின்ற போதிலும் நெளுக்குளம் அஞ்சல் அலுவலகத்தில் மாத்திரம் போக்குவரத்து தண்டப்பணம் செலுத்த முடியாத நிலைக்கு காரணம் என்ன என்பது தொடர்பில் சாரதிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.
இவ்விடயம் தொடர்பில் வவுனியா மத்திய அஞ்சல் அலுவலகத்தை தொலைபேசியூடாக தொடர்புகொள்ள முயற்சித்த போதிலும் அவர்களை தொடர்பு கொள்ள முடியவில்லை. (ப-18)

## தனியார் - இ.போ.ச பஸ்கள் போட்டி; குடை சாய்ந்தது வாழ்வாதார சிற்றூர்தி

வவுனியா, ஏப். 14
மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிழவன்குளம் பகுதியில் தனியார் பேருந்தும் இலங்கை போக்குவரத்து சபை பேருந்தும் ஒன்றை மற்றொன்று போட்டி போட்டு செலுத்தப்பட்டதில் கிளிநொச்சி பிரதேசத்தை சேர்ந்த யாழ் ஐஸ்கிறீம் என்ற வாழ்வாதார சிற்றூர்தி குடை சாய்ந்தது. இதில் ஒருவர் காயமடைந்துள்ளதுடன், ஐஸ்கிறீம் வண்டியும் பலத்த சேதமடைந்துள்ளது.
மேலும், காயமடைந்த நபர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ய-319,ரி2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## கேளிக்கைகள் வேண்டாம்

இன்று சித்திரைப் புத்தாண்டு. கடந்த வருடம் கொரோனாத் தொற்றுக் காரணமாக புத்தாண்டைக் கொண்டாட முடியாத கட்டாய நிலைக்குள் நாம் இருந்தோம். ஊரடங்கு உத்தரவுகள் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் இந்த வருடம் நிலைமை அவ்வாறல்ல. புத்தாண்டைக் கொண்டாடக்கூடியவர்களாக நாம் உள்ளோம். தடைகள், கட்டுப்பாடுகள் இந்த வருடம் இல்லை. ஆனால் உண்மையில் இந்த வருடம்தான் கடந்த வருடத்தை விடவும் ஆபத்தானது என்றால் அதில் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை.

கட்டுப்பாடுகள் இல்லை என்பதால் புத்தாண்டை எந்த அச்சமும் இல்லாமல் கொண்டாடலாம் என்று அர்த்தமல்ல. கடந்த வருடம் கொரோனாத் தொற்று எமக்குப் புதியது. அதைக் கையாள்வதற்கு என்ன செய்வது என்ற தெளிவு – புரிதல் எமக்குக் குறைவாக இருந்தது. பேரச்சம் கலந்த அந்தச் சூழலில் கட்டுப்பாடுகள் இறுக்கப்பட்டன. ஆனால், இந்த வருடம் கொரோனா எமக்குப் புதிதல்ல. அதனுடன் நாம் 'வாழப் பழகிவிட்டோம்'. அதுபோக இன்னுமொரு பொதுமுடக்கத்தை அறிவித்தால் அதைத் தாங்கக்கூடிய நிலையில் இலங்கைத் தீவு இல்லை. நாட்டின் பொருளாதாரத்திலும் கொரோனா தாண்டவத்தை ஆடிவிட்டது. இவையெல்லாம் ஒருங்கே சேர்ந்துதான் இம்முறை 'முடக்க விலக்கு' அளிக்கப்பட்டுள்ளது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆக, விதிகள், இறுக்கமான கட்டுப்பாடுகள் இல்லாத பட்சத்திலும் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டிய தார்மீகக் கடைமை எமக்கு உள்ளது. எமது குடும்பத்தினதும், சமூகத்தினதும் பாதுகாப்புக்கு நாம்தான் பொறுப்பாளிகள். கோவில்களுக்குச் சென்று ஆன்மிகக் காரியங்களை ஆற்றுவதுடன் எம் கொண்டாட்டங்களை இன்று மட்டுப்படுத்திக் கொள்வதே இந்தப் புத்தாண்டில் நாம் செய்யும் அரும்பெரும் காரியமாக இருக்கும். அதுவே புத்திசாலித் தனமும்கூட. ஆன்மிகக் காரியங்களைத் தாண்டி கேலிக்கூத்துகளிலும், கேளிக்கைகளிலும், களியாட்டங்களிலும் இன்று எம்மை ஈடுபடுத்திக் கொள்வதானது எமக்கு நாமே குழி தோண்டும் செயல். இந்தப் பாதிப்பு எம்முடன் மட்டும் நின்றுவிடாது. இது எம்மைத்தாண்டி எம் சார்ந்த சமுதாயத்தை பெரும் பின்னடைவுக்குள் பாதாளத்துக்குள்ளும் தள்ளும் செயலே அன்றி வேறென்ன?.

ஏற்கனவே எம்மைச் சுற்றிநிற்கும் சோதனைகள் கொஞ்சநஞ்சமல்ல. முறையான பரிசோதனைகள் இல்லாமல் நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய், பருப்பு என்பவற்றால் இலங்கையர்களுக்குப் புற்றுநோய் ஏற்படும் என்கின்ற ஆபத்து பூதாகரமாகியுள்ள நிலையில், நாமும் வலிந்து சென்று கொரோனாவைப் பற்றிக்கொள்ள வேண்டுமா? என்பதை ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். ஆகவே, கொண்டாட்டங்கள், களியாட்டங்ளை இந்தப் புத்தாண்டில் தவிர்த்துக்கொண்டு பொறுப்புணர்ந்தவர்களாக செயற்படும் பட்சத்தில் அடுத்த புத்தாண்டாவது இன்பம் பயப்பதாக, எம் கொண்டாட்டங்களுக்கு உகந்ததாக அமையும்.

இது ஒரு கடினமான தடைதாண்டல். இந்தத் தடையை தாண்டும் வல்லமையை நாம் உருவாக்க வேண்டுமே தவிர அந்தத் தடையுடன் மோதுண்டு மூக்குடைத்தல் தகாது.




# இம்முறை வெசாக் யாழ்.மாவட்டத்தில்



**கொழும்பு,ஏப்.14**

**அரச வெசாக் தினத்தை, இந்த வருடம் யாழ்ப்பாண மாவட்டத்தில் நடத்துவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.**

எவ்வாறாயினும் அதற்கு மேலும் காலம் உள்ளது. அரச வெசாக் தினத்தை முன்னிட்டு நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நிகழ்வுகள் முன்னெடுக்கப்படும்.

அதேவேளை எதிர்வரும் புத்தாண்டைக் கொண்டாடியதன் பிரதிபலனை, மே மாதத்தின் முதல் பகுதியில் மக்கள் அறிந்துகொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப-4)

## வெளிநாட்டு பணியாளருக்கு தனிமைப்படுத்தல் இலவசம்

கொழும்பு,ஏப்.14

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்துள்ள, வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பும் இலங்கையர்களுக்கு இலவசமாக தனிமைப்படுத்தல் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த இலவச தனிமைப்படுத்தல் செயற்றிட்டத்தைப் பெறும் முதல் குழுவினர் நேற்று முன்தினம் இரவு இலங்கையை வந்தடைந்தனர். குவைத்திலிருந்து வருகை தந்த 149 இலங்கையர்கள், வெலிகம பிரதேசத்திலுள்ள சுற்றுலா ஹொட்டல்களில் தனிமைப்படுத்தலுக்காக தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த இலவச தனிமைப்படுத்தல் செயற்றிட்டத்துக்காக சுற்றுலா ஹொட்டல்களின் 600 அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. (ப-4)

## அழகித் தெரிவிலும் அரசியல் தலையீடு

### ஹரின் எம்.பி. கிண்டல்

கொழும்பு,ஏப்.14

இலங்கையில் அழகியைத் தெரிவு செய்வதற்கும், முழுமையான அரசியல் தலையீடு உள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உலகில் முதல் பெண் பிரதமரைத் தெரிவுசெய்த நாடு என்ற பெருமையால் இலங்கை பிரபலமடைந்தது. இன்று திருமதி உலக அழகி மற்றும் திருமதி இலங்கை அழகிகளால் நகைப்புக்குள்ளாகி பிரபலமடைந்துள்ளது. இவற்றுக்குள்ளும் அரசியல் தலையீடு உள்ளது.

ஆனால் நல்லாட்சி அரசில் பல முக்கிய சிறந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன. அதன் மூலம் சுயாதீன பொலிஸ் மற்றும் நீதித் துறை என்பவை ஸ்தாபிக்கப்பட்டன.

சட்டத்துடன் தொடர்புடைய விடயங்களிலும், ஏனைய விடயங்களிலும் எந்தவொரு அரசியல் தலையீடும் காணப்படவில்லை-என்றார். (ப-4)

## வீதிகளின் தரத்தை ஆராய விசேட பிரிவு

நாட்டில் சகல வீதிகளினதும் தரம் தொடர்பில் ஆராய்வதற்கு, விசேட பிரிவொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வீதிகளின் தரம் தொடர்பில் இந்தக் குழு ஆராய்ந்து, அதில் குறைப்பாடுகள் இருக்குமானால் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவிக்கும். அதன் பின்னரும் அது சீரமைக்கப்படாமல், அதனால் ஏதேனும் விபத்துக்கள் ஏற்படுமாயின் அதற்கு அந்த நிறுவனங்களே பொறுப்புக்கூற வேண்டும். இதேவேளை, தனியார் பஸ் சாரதிகள், பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுவதற்கான விசேட அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதை கட்டாயமாக்குவதற்கு போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. சாரதி அனுமதிப் பத்திரத்துக்கு மேலதிகமாக மேற்கொள்ளப்படும் பரிசோதனையில் அவர்கள் சித்தியடைந்திருக்க வேண்டும். அதில் சித்தியடைவோருக்கு மாத்திரமே 2 வாரங்கள் தங்க வைக்கப்பட்டு பயற்சிகள் வழங்கப்படும். அவர்களது மனநிலை மற்றும் செயற்திறன் குறித்தும் கண்காணிக்கப்படும். பசறையில் அண்மையில் இடம்பெற்ற பஸ் விபத்தின் எதிரொலியாக இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ப-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறிபோகுமா ஜீவனின் இராஜாங்க அமைச்சு?

கொழும்பு, ஏப். 14

**தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், தாய்மாரை இழிவுபடுத்தி ஆற்றிய உரையையடுத்து, கட்சி உறுப்பினர்கள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

அதேநேரம், ஜீவன் தொண்டமானை இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து நீக்குமாறு அரசுக்கு அழுத்தங்கள் கொடுப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில நாள்களுக்கு முன்னர் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பொகவந்தலாவையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில், ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுத்த விடயம் குறித்து பேசும்போது, அரசியல்வாதியொருவர் ஆயிரம் ரூபா விடயத்தில் காட்டிக் கொடுத்தார் என்று கூறியதோடு, தாய்மாரையும் மிக மோசமான வார்த்தைகளில் பேசியிருந்தார்.

இது தொடர்பான காணொலி சமூக வலைத்தளங்களில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்ததுடன், பலரும் கடும் கண்டனங்களைத் தெரிவித்திருந்தனர்.

இதையடுத்து, அவர் தான் பேசிய வார்த்தை தவறானது என்றும், இனி இவ்வாறான தவறு இடம்பெறாது எனவும் காணொலிப் பதிவினூடாகத் தெரிவித்தார். எனினும், அவர் மன்னிப்பு என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை என்பது பெரும் பேசுபொருளாகியது.

இதையடுத்து, கட்சி வட்டாரத்திலுள்ள பல பெண்களும், பெண் உறுப்பினர்களும் அவரது உரையில் பிழையிருக்கின்றது என்று சுட்டிக்காட்டியிருந்தனர் என்றும், கட்சி மட்டத்திலுள்ள பெண்கள் அவருடைய உரை தொடர்பாக பெரும் அதிருப்தியிலுள்ளனர் எனவும் குறித்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு ஆதரவளிக்கும் பல பெண்கள் அமைப்புகளும், அவருடைய உரைகுறித்து கடும்கண்டனங்களைத் தெரிவித்துள்ளன.

அதேபோன்று, இந்தியத் தூதரகத்தின் அதிகாரிகளும் ஜீவன் தொண்டமானின் உரைக்கு கவலை தெரிவித்துள்ளனர் என்றும், கட்சி மட்டத்தில் இவ்வாறான பேச்சுக்கள் இடம்பெற்றாலும் பொதுவெளியில் இவ்வாறான வார்த்தைப் பிரயோகத்தைப் பயன்படுத்துவது பொருத்தமற்றது என்றும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இராஜாங்க அமைச்சராக இருந்துகொண்டு, இவ்வாறான வார்த்தைகளைப் பிரயோகிப்பது, அரசுக்குப் பெரும் பாதிப்பாக அமையக்கூடும் எனப் பல தரப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால், ஜீவன் தொண்டமானை இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து நீக்குமாறு அரசிடம் கோரிக்கை விடுப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், ஜீவன் தொண்டமானின் உரை குறித்து, கட்சி மட்டத்தில் முக்கிய கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன எனவும், இதன்போது பலரும் தங்களுடைய அதிருப்தியைத் தெரிவிக்கவுள்ளனர் எனவும் அறியமுடிகின்றது.

ஜீவன் தொண்டமானின் உரையை அடுத்து, பல தரப்பினரும் தொலைபேசி அழைப்பினூடாகக் கட்சியினருக்குக் கடும் கண்டனங்களை வெளிப்படுத்தி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-22)

## 9,25,242 பேருக்கு இதுவரை தடுப்பூசி



கொழும்பு, ஏப். 14

இலங்கையில் இது வரை 9 லட்சத்து 25 ஆயிரத்து 242 பேருக்கு கொரோனாத் தொற்றுத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

அபிவிருத்திப் பணிகளுக்காக இலங்கையில் தங்கியுள்ள இரண்டாயிரத்து 469 சீனர்களும் இதில் அடங்குவர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ப-4)

## சுங்க உதவி அத்தியட்சகர் சி.ஐ.டியினரால் கைது

கொழும்பு, ஏப். 14

சுங்கத் திணைக்களத்தின் உதவி அத்தியட்சகர் ஒருவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் போலியான ஆவணங்களைத் தயாரித்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்தோனேசியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 23 பாக்குக் கொள்கலன்கள் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படவிருந்தன.

இவற்றை இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டவை என்ற போர்வையில், இந்தியாவுக்கு மீள் ஏற்றுமதி செய்வதற்காக, கணனி மூலம் போலியான ஆவணங்களை இவர் தயாரித்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ப-4)

## ரஞ்சன் ராமநாயக்கவுக்காக ஹரின் செய்யவுள்ள தியாகம்

கொழும்பு, ஏப். 14

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை, நாடாளுமன்றுக்கு அனுமதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி, தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஹரின் பெர்னாண்டோ இராஜினாமா செய்யவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் மே மாதம் முதல் வாரத்தில் இடம்பெறும் நாடாளுமன்ற அமர்வில், அவர் இந்த விசேட அறிவிப்பை வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

"நான் ரஞ்சன் ராமநாயக்க சார்பாக ஒரு அரசியல் முடிவை எடுத்து வருகின்றேன். மே மாதம் முதல் வாரத்தில், அரசுக்கு ஒரு சவாலை முன்வைப்பேன்." என்று ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பு மூலம் தனது நாடாளுமன்ற ஆசனத்தை ஹரின் பெர்னாண்டோ தியாகம் செய்வார் என்றும், ரஞ்சன் ராமநாயக்கவுக்கு மன்னிப்பு வழங்குமாறு கோரிக்கை முன்வைப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ப-4)

## விபத்தில் இருவர் சாவு

அம்பாறை, ஏப். 14

அதிவேகமாகப் பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிள்களும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. அதில் இருவர் உயிரிழந்தனர்.

இந்த விபத்து அம்பாறை, பன்னல்கமப் பகுதியில் நேற்று முன்தினம் நடந்துள்ளது.

மோட்டார் சைக்கிள்களைச் செலுத்திச் சென்ற, சிவில் பாதுகாப்புப் படையினர் இருவரே விபத்தில் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-4)

## 658 மதுப் போத்தல்களுடன் சீனப்பிரஜையொருவர் கைது



கொழும்பு, ஏப். 14

658 மதுபானப் போத்தல்களுடன் சீனப் பிரஜை ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கொள்ளுபிட்டியில் உள்ள சூப்பர் மார்க்கெட் ஒன்றுக்கு, பொருள்களை இறக்குமதி செய்யும் போர்வையில், சீனாவிலிருந்து சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட மதுபானப் போத்தல்களைக் கடத்தியுள்ளார்.

கொள்கலன் ஒன்றில் குறிப்பிட்ட மதுபானப் போத்தல்கள் நுட்பமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-4)

## அதிவேக வீதிகளில் பொலிஸ் கண்காணிப்பு

கொழும்பு, ஏப். 14

அதிவேக வீதிகளில், பொறுப்பற்ற முறையில் பயணிப்பவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சித்திரைப் புத்தாண்டுக் காலத்தில் அதிவேக வீதிகளைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், அங்கு பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

சமூக வலைத்தளங்களில் பரவிய சில புகைப்படங்களை அடுத்து, போக்குவரத்து விதிமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்குப் பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப-4)

## கட்டணத்தில் மோசடியெனில் பஸ்களின் அனுமதி ரத்தாகும்

### போக்குவரத்து அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஏப். 14

அறிவிக்கப்பட்டதை விட, கூடுதலான கட்டணத்தை அறவிடும் பஸ்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பிட்ட பஸ்களின் போக்குவரத்து அனுமதிப் பத்திரங்களும் ரத்துச் செய்யப்படும் என்று போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை உரிய கட்டணத்தை விட கூடுதலான கட்டணங்களை அறவிடும் பஸ்கள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு, 0112 860 860 என்ற தொலைபேசி இலக்கமும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புறக்கோட்டை பஸ்தியன் மாவத்தை, கம்பஹா, கடவத்த, பியஹம, கட்டுநாயக்க, கடுவெல, நிட்டம்புவ, களுத்துறை, அளுத்கம, மத்துகம, ஹொரணை, பாணந்துறை, ஹோமாகம, நாவின்ன, பிலியந்தல ஆகிய பஸ்தரிப்பு நிலையங்களில் இருந்து, தூர இடங்களுக்கான பஸ் சேவைகள் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஊவேஉரியமுறையில் போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறவில்லை யாயினும், பயணிகள் குறித்த தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து தகவல் வழங்க முடியும் என்றும் அமைச்சு அறிவித்துள்ளது. (ப-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தாண்டில் அனைவருக்கும் சுபீட்சம் கிடைக்கட்டும்



புதிய எதிர்பார்ப்புகளுடனும் அவற்றை அடைந்துகொள்வதற்கான உறுதியுடனும் சிங்கள, தமிழ் புத்தாண்டை வரவேற்பது எமது கலாசாரத்தில் ஒரு மதிப்புமிக்க பாரம்பரியமாகும்.
கடந்த வருடம் புத்தாண்டு பிறப்பின் போது நாட்டில் நிலவிய சீரற்ற சுகாதார நிலைமைகள் அதற்குத் தடையாக இருந்தபோதிலும், பண்டைய பாரம்பரியங்கள் மற்றும் மரபுகளுக்கு முன்னுரிமை அளித்து, சுகாதார ஆலோசனைகளுக்கு ஏற்ப புத்தாண்டை மகிழ்ச்சியுடன் அனுபவிக்கக்கூடிய வகையில் இந்த ஆண்டின் பின்னணியை நாம் அனைவரும் சேர்ந்து அமைத்திருக்கின்றோம். அது புத்தாண்டின் விடியலை ஆர்வத்துடன் எதிர்பார்த்திருக்கும் சிறு பிள்ளைகளைப் போலவே, அனைத்து குடிமக்களினதும் எதிர்பார்ப்பு நிறைவேறியிருப்பதை காட்டுகிறது.
சிங்கள, தமிழ் புத்தாண்டு எங்களது மிகப்பெரும் கலாசார விழாவாகும். அனைத்து மக்களும் எந்தவிதமான பேதங்களும் இன்றி அமைதியானதும் நேர்மையானதுமான எண்ணங்களுடன் சிங்கள, தமிழ் புத்தாண்டு சம்பிரதாயங்களில் இணைந்துகொள்ள வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பாகும்.
புத்தாண்டு காலத்தில் தங்களது பிள்ளைகளை பிரிந்து கடமைகளில் ஈடுபட்டுள்ள மற்றும் வெளிநாடுகளில் உள்ள அனைவரினதும் அர்ப்பணிப்புகளை நான் இச்சந்தர்ப்பத்தில் கௌரவத்துடன் நினைவுகூரு கிறேன். மலரும் புத்தாண்டு அனைவருக்கும் சுபீட்சமும் மகிழ்ச்சியும் நிறைந்த இனிய புத்தாண்டாக அமைய வாழ்த்துகின்றேன்.

**கோத்தாபய ராஜபக்ச,**
ஜனாதிபதி.

## வல்லமை தரவேண்டும்



பிலவ வருடப் பிறப்பைக் கொண்டாடும் அனைத்து உறவுகளுக்கும் அன்புரிமையுடன் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.
ஒவ்வொரு பண்டிகைகளும் வரும்போது அவை எம் மக்களுக்கு விடிவைத் தராதா என்று ஏக்கத்துடனேயே காத்திருந்து கழிந்து செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலேயே இன்று தமிழினம் இருந்து வருகின்றது. ஏமாற்றங்களே தொடர் கதையாகிப்போயுள்ள சூழலில் பிறக்கின்றது பிலவ வருடம்.
கொண்டாட்டங்கள் எங்கள் வாழ்வின் ஓரங்கம். அவற்றைத் தவிர்க்க முடியாது. எங்கள் கலாசாரங்களுடன் அவை இரண்டறக் கலந்துள்ளன. விரக்தியிலிருந்தாலும் மனதிலிருக்கும் நம்பிக்கையின் தெம்புடன் இந்தப் புத்தாண்டையும் நாம் கொண்டாடுவோம்.
தென்னிலங்கையில் விஸ்வரூபமெடுத்துள்ள சிங்கள பௌத்த பேரினவாதம், தமிழினத்தை வேரோடு அழித்தொழித்து விட்டு அடுத்த காரியமாற்றும் நிலையில் இருக்கின்றது. இந்தப் பயங்கரமான சூழலை எதிர்கொள்ளவும், அதனை உடைத்தெறிந்து தனது வேணவாவை தமிழினம் பூர்த்தி செய்யவும் இந்தப் புத்தாண்டு எங்களுக்கு வல்லமை தரவேண்டும்.

**ஈ.சரவணபவன்.**
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

## புதிய எதிர்பார்ப்புகள் நிறைவேறட்டும்



அனைத்து இலங்கையர்களினதும் புதிய எதிர்பார்ப்புகள் நிறைவேறும் தமிழ் சிங்கள புத்தாண்டு பிறப்பை முன்னிட்டு இந்த வாழ்த்து செய்தியை மிகுந்த மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறேன்.
நம் நாட்டு மக்கள் பழங்காலத்திலிருந்தே பழங்கால பழக்கவழக்கங்களுக்கும் மரபுகளுக்கும் முன்னுரிமை அளித்து, விழாக்களைக் கொண்டாடி வருகின்றனர்.
விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு மக்களுடன் பின்னிப் பிணைந்திருக்கும் கலாசார ரீதியாக மதிப்புமிக்க சமூக நடைமுறைகள் இந்தத் தமிழ் சிங்கள புத்தாண்டின் மூலம் நினைவு கூரப்படுகின்றது. சுகாதார நடைமுறைகளை மனதில் கொண்டு நமது கலாசார விழுமியங்களைப் பாதுகாப்பது நம் அனைவரினதும் பொறுப்பாகும். இப்புத்தாண்டு உங்கள் அனைவருக்கும் சுபீட்சம் நிறைந்த வளமான ஆண்டாக அமைய வேண்டும் என பிரார்த்திக்கின்றேன் !

**மஹிந்த ராஜபக்ச**
பிரதமர்

## பிலவ சித்திரைப் புத்தாண்டை புத்தெழுச்சியுடன் கொண்டாடுவோம்



இலங்கையில் சிங்கள மக்களும், தமிழ் மக்களும் இப் புத்தாண்டைக் கொண்டாடுவதைப் போல இந்து மத மக்கள் இந்திய நாட்டிலும் உலக நாடுகள் பலவற்றிலும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களும் தங்கள் புத்தாண்டாகக் கொண்டாடும் விழாவாக இடம்பெறுவது பாரம்பரியமாகும்.
இலங்கையில் தமிழ் மக்கள் 1958 முதல் இனக் கலவரங்களினாலும், இனப் போரினாலும் பல லட்சம் மக்களைப் பலிகொடுத்துவிட்டும் தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட மக்கள் இனவிடுதலையுமின்றி தினமும் பௌத்த சிங்கள ஆட்சிகளினால் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களாய் தங்கள் தேசத்தினதும், மக்களின் பாதுகாப்பற்ற மனிதர்களாய் அவலத்தில் வீழ்ந்து கிடக்கின்றனர். இருப்பினும் தங்கள் இன விடுதலைக்காகவும், தங்கள் தமிழ்த் தேசத்தின் விடுதலைக்காக வும் தினமும் போராடிக்கொண்டேயிருக்கின்றனர். எவ்வாறெனினும் தைப்பொங்கல் கொண்டாட்டங்களின்போது தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற திடசங்கற்பத்தோடு கொண்டாடுவது போன்று சித்திரைப் புத்தாண்டையும் புத்தெழுச்சியுடன் கொண்டாடுங்கள் என்றே வேண்டி நிற்கின்றோம்.

**மாவை.சோ.சேனாதிராசா.**
தலைவர், இலங்கை தமிழ் அரசுக் கட்சி

## தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் ஆண்டாக 'பிலவ' மலரட்டும்



20.3.2022 வரை லாப வீட்டில் ராகு நிற்பதால் எதிலும் மகிழ்ச்சி பொங்கும். அதிகார பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். எதிர்பார்த்த பண வரவு உண்டு. வெளிவட்டாரத்தில் புகழ் கூடும். பொது நிகழ்ச்சிகள், கல்யாண, கிரகப் பிரவேச வைபவங்களை முன்னின்று நடத்துவீர்கள்.

கேது 5இல் நிற்பதால் பிள்ளைகளுடன் மனவருத்தங்கள் வந்து நீங்கும். 21.3.2022 முதல் 10இல் ராகு நுழைவதால் அடுத்தடுத்து வேலைச்சுமை இருக்கும்.

உத்தியோகத்தில் இடமாற்றம் உண்டு. கேது 4இல் நுழைவதால் புது முயற்சிகள் தடைப்பட்டு வெற்றியடையும். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். வீட்டுப் பராமரிப்பு செலவுகள் அதிகரிக்கும்.

**சனிபகவான் தரும் பலன்கள்**

இந்த ஆண்டு முழுக்க கண்டகச் சனியாக அமர்வதால் பய ணத்தின் போது கவனம் தேவை. ஏமாற்றங்கள், பண இழப்பு கள் வந்து போகும்.

**எதிர்பாராத திடீர் திருப்பங்களோடு அதிரடி முன்னேற்றங்களையும் தருவதாக இந்தப் பிலவ வருடப் புத்தாண்டு அமையும்.**

## இன்றைய நாள்




**மேடம்:** பிள்ளைகள் உங்கள் விருப்பப்படி நடந்து கொள்வர். மகிழ்ச்சி கூடும். பல காலம் தடைப்பட்ட விஷயங்கள் நல்ல விதத்தில் முடியும். பிள்ளைகளின் திருமணத்தை ஏற்பாடு செய்து முடிப்பீர்கள்..


**இடபம்:** மகனுக்கு அதிக சம்பளத்துடன் புதிய வேலை கிடைக்கும். பிள்ளைகளுக்கு நல்ல வாழ்க்கைத்துணை ஏற்பாடாகும். வாகனத்தை சீர் செய்வீர்கள். புதிய பொருள் வாங்குவீர்கள்..


**மிதுனம்:** பழைய பிரச்சினை ஒன்றை புதிய அணுகுமுறையால் தீர்ப்பீர்கள். தோல்வி மனப்பான்மையிலிருந்து விடுபடுவீர்கள். தைரியம் கூடும். பணவரவு அதிகரிக்கும்.


**கடகம்:** குடும்பத்தில் நிலவி வந்த சண்டை, குழப்பங்கள் விலகும். பூர்வீக சொத்தில் இருந்து ஒரு பங்கு உங்கள் கைக்கு வந்து சேரும். தந்தைவழி உறவினர்கள் மூலம் ஆதாயம் அடைவீர்கள்.


**சிம்மம்:** மனப்போராட்டங்கள் குறையும். எதிர்த்தவர்கள் அடங்குவார்கள். உங்கள் பேச்சில் முதிர்ச்சி தெரியும். நட்பு வட்டம் விரியும். பிரச்னைகள் படிப்படியாகத் தீரும்.


**கன்னி:** பேச்சு, செயலில் இருந்த கவனம் தேவைப்படும் நாள். அனைத்து நடவடிக்கைகளிலும் சற்று கவனமாக இருங்கள். உடன்பிறந்தோரால் உதவிகள் உண்டு. நல்லவர் நட்பு வரும்..


**துலாம்:** புதிய சொத்து வாங்குவதற்குப் பத்திரப் பதிவு செய்வீர்கள். கடனில் ஒருபகுதியை அடைப்பதற்கு புதிய வழி பிறக்கும். இழுபறியாக இருந்த விஷயங்கள் எல்லாம் முடிவடையும்.


**விருச்சிகம்:** தள்ளிப் போன வழக்கில் தீர்ப்பு சாதகமாக வரும். தாய்க்கு சிறுசிறு உடல் உபாதைகள் தற்காலிகமாக வரும். நிதி நிலைமை மேம்படும். பழைய மனக்கசப்புகள் நீங்கும்.


**தனுசு:** மாமன்வழி உறவினர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் நீங்கும். வாகனத்தில் செல்லும்போது பாதுகாப்பாகச் செல்லுங்கள். சொத்து வாங்கும்போது பத்திரங்களைச் சரி பார்த்து வாங்குங்கள்..


**மகரம்:** உங்களை பற்றிய உண்மையில்லாத விமர்சனங்களை புறக்கணியுங்கள். திருப்பம் ஒன்றால் முகம் மலரும். உற்சாகமாக வலம் வருவீர்கள். பேச்சில் கவனம் தேவை.


**கும்பம்:** மேலதிகாரி ஒருவருடன் இருந்த மோதல்கள் நீங்கும். குடும்பத்தில் உள்ள பெரியவர் ஒருவரின் ஆரோக்கியம் சீராகும். திரு மணத் தடை நீங்கும். பணியில் கவனம் தேவை.


**மீனம்:** :அடுத்தடுத்து சுபநிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். பங்குச்சந்தை மூலம் பணம் வரும். சுப விஷயம் ஒன்றை முன்னின்று நடத்தி மகிழ்வீர்கள்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி. மாவட்ட மருத்துவமனைக்கு நிரந்தர பணிப்பாளரை நியமிக்குக

*மாவட்ட சிவில் சமூகப் பிரதிநிதிகள் கோரிக்கை*

**கிளிநொச்சி, ஏப்.14**

**கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் தற்போதைய பணிப்பாளர் உயர் கல்விக்காக விடுப்பில் செல்லவுள்ள நிலையில் அவ் வெற்றிடத்துக்கு இதே மாவட்டத்தைச் சேர்ந்த பொருத்தமான ஒருவரை நியமிக்குமாறு மாவட்ட சிவில் சமூகப் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது;

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைப் பணிப்பாளர் ஒருவர் மிக அண்மையில் உயர் கல்விக்காக சென்றுள்ள நிலையில் அவருக்குப் பின்னர் நியமிக்கப்பட்டவரும் தனது உயர் கல்விக்காக சில நாள்களில் செல்லவுள்ளார். எனவே தற்போது வெற்றிடமாகவுள்ள பணிப்பாளர் பதவிக்கு நிரந்தரமாக இதே மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரை நியமித்து மருத்துவமனையின் பணிகளைச் சீராக மேற்கொள்ள உதவவேண்டும். கிளிநொச்சி மாவட்டத்தின் சுகாதாரத் துறைக்குள் தற்போது இதற்குப் பொருத்தமான தகுதியுடைய, இந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்டத்தின் அனைத்து தரப்பினர்களுடன் நன்கு தொடர்பாடல் உறவைக் கொண்டுள்ள, மாவட்டத்தின் அனைத்து நிலைமைகளையும் நன்கு அறிந்துள்ள மருத்துவ அதிகாரி ஒருவர் காணப்படுகின்றார். எனவே அவரை நியமிக்குமாறு கோருகின்றோம். இதற்கான பரிந்துரை செய்கின்ற அதிகாரத்தைக் கொண்டுள்ள மாவட்டச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அதனை உறுதியாக மேற்கொள்ள வேண்டும். அடிக்கடி பணிப்பாளர்களை மாற்றுவது மருத்துவமனையின் வளர்ச்சிக்கு பெரும் முட்டுக்கட்டையாகவே அமையும் என்பதால் மாவட்டத்திலேயே வசிக்கும் தகுதிவாய்ந்த மருத்துவர் ஒருவரை நியமிக்கும்போது அவர் நீண்ட காலத்துக்கு நிரந்தரமாக பணியாற்ற முடியும்.

எனவே மாவட்டத்தின் மிக முக்கிய மருத்துவமனையான கிளிநொச்சி மாவட்ட மருத்துமனையின் சிறப்பான சேவைக்கு விரைவாக பொருத்தமான பணிப்பாளர் நியமனத்தை வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவரையும் கோருகின்றோம் - என்றுள்ளது. (ப-214)



## திருவுருவச்சிலை திறப்பு

கொடிகாமம், ஏப்.14

மிருசுவில் பகுதியில் அமைந்துள்ள படித்த மகளிர் திட்டம் சிறீஞானதுர்க்கை அம்மன் திருவுருவச்சிலை திறப்பு நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை மதியம் 12 மணிக்கு ஆலய தர்மகர்த்தா சிவத்திரு சின்னத்தம்பி நவரத்தினம் ஐயா தலைமையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன 2ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலசிறி சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் முன்னிலையில் நடைபெற்றது.

நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ப.செந்தில்நந்தனன், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ப.பிரதீபன், சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ.மயூரன், 52 ஆவது படையணியின் இராணுவ உயரதிகாரி, எழுதுமட்டுவாழ் வடக்கு கிராம அலுவலர் மற்றும் பக்த அடியார்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ச-159)

## பயன்கள் அற்ற நிலையில் முல்லை.புதிய பஸ் நிலையம்

*கரைதுறைபற்று சபை உறுப்பினர் விசனம்*




முல்லைத்தீவு, ஏப்.14

முல்லைத்தீவு பதிய பஸ் நிலையம் மலர்ச்சோலையா என கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் திருமதி. இமக்குலேற்றா புஸ்பானந்தன் கேள்வியெழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

பெருமளவு நிதிச் செலவில் முல்லைத்தீவு பஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. பஸ்கள் நிறுத்துவதற்கு இடமில்லை. பயணிகளுக்கான இருக்கைகள் இல்லை. ஒட்டுமொத்தத்தில் புதிய பஸ் நிலையம் கால்நடைகளின் உறைவிடமாக மாறி உள்ளது. வவுனியா பஸ் நிலையம் போன்றே முல்லைத்தீவு பஸ் நிலையமும் அமைய வேண்டும் என்பதற்காக நிதி ஒதுக்கப்பட்டது என அறிகின்றோம். ஆனால் முல்லைத்தீவு பஸ் நிலையம் எந்த விதமான பயனும் அற்ற நிலையில் மலர்ச்சோலை போன்று காணப்படுகின்றது. புதிய பஸ் நிலையத்தைப் பயனுள்ளதாக மாற்றுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வேலிகள் அடைக்கப்பட்டு மரக்கன்றுகள் நடப்பட்டு பஸ் நிலையம் பயணிகளுக்கு பொருத்தமான இடமாக மாற்றப்பட வேண்டும். இதேவேளை தற்போது மாவட்டச் செயலகத்துக்கு அருகில் இருந்து பயணத்தைத் தொடங்கும் பஸ்கள் முல்லைத்தீவு நகருக்குள் செல்வதில்லை என்ற குறைபாடு தொடர்ச்சியாகத் தெரிவிக்கப்படுகின்றது. குற்றச்சாட்டு மாவட்டத்துக்குள் பணியில் ஈடுபடுகின்ற பஸ்களாவது முல்லைத்தீவு நகருக்குள் சென்று திரும்ப வேண்டும் - என்றார். (ப-13)



ஜேர்மனியைச் சேர்ந்த மகாலிங்கம் நிறைமதன் மற்றும் லண்டனைச் சேர்ந்த கந்தப்பிள்ளை தீலிபன் ஆகியோரது நிதிப்பங்களிப்பில், விதுர்ஷனா அறக்கட்டளை ஊடாக பொருளாதாரம் நலிந்த 30 குடும்பங்களுக்கு சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ச- 222)

## கைதிகளை பார்வையிட கட்டுப்பாடு

கொழும்பு,ஏப்.14

சிறைக் கைதிகளை, பார்வையாளர்கள் சந்திப்பது, மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று சிறைச்சாலை ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைவாக கைதி ஒருவரை ஒரு மாதத்தில், இரண்டு விருந்தினர்கள் மட்டுமே சந்திக்க முடியும். அந்த வாய்ப்பு தமிழ், சிங்கள புத்தாண்டையொட்டி வழங்கப்படும். மேலதிக பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப-4)



## அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் மன்னார் வீதியில் பறந்தன கார்கள்

*சமூக ஆர்வலர்கள் விசனம்*

மன்னார், ஏப். 14

பொதுமக்களின் வீதிப் பயணத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில், வேகமாகப் பயணித்த இரண்டு கார்கள் தொடர்பாக சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் வீதியில் நேற்று பயணித்த இரண்டு கார்களில் இருந்த பெண்கள், காரின் யன் [illegible] [illegible] ளனர். கார்கள் வேகமாகப் பயணித்துள்ளன. இது தொடர்பிலேயே சமூக ஆருவலர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

நாடு முழுவதும் விபத்துக்கள் மூலமாக ஒவ்வொரு நாளும் இறப்புக்கள் சம்பவிக்கின்றன. இந்த நிலையில் மன்னார் தலைமன்னார் வீதியில் பொறுப்பற்ற முறையில் குறித்த வாகனத்தைச் செலுத்திச் சென்ற குறித்த நபர்கள் பொதுமக்களின் பயணத்துக்கு பெரும் இடையூறு விளைவித்துள்ளனர்.

சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல் செல்பவர்களிடமும் வாகன உதிரிப்பாகங்களில் தேய்மானம் ஏற்பட்டுள்ள வாகனச் சாரதிகளிடமும் தண்டப் பணம் அறவிட்டு அனுமதிப்பத்திரத்தை ரத்துச் செய்யும் நடவடிக்கைகளையும் எடுத்துள்ள பொலிஸார் இவ்வாறான அத்துமீறிய செயற்பாடுகளுக்கு பதில் கூறுவார்களா என்றும் சமூக ஆர்வலர்கள் கேள்வியெழுப்பினர். (ப-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வவுனியாவில் பனிமூட்டம்; கடும் சிரமத்தில் சாரதிகள்

வவுனியா, ஏப்.14
வவுனியாவில் நிலவும் கடும் பனிமூட்டம் காரணமாக வாகனச் சாரதிகள் மற்றும் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
கடந்த சில நாள்களாக வவுனியாவில் மழை பெய்து வந்த நிலையில், நேற்று முன்தினம் அதிகாலையில் இருந்து பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஏ-9 வீதி பனிமூட்டமாக காட்சியளித்தது.
இதனால் அதிகாலையில் தமது கடமைகளுக்குச் செல்லும் ஊழியர்கள், தனியார் வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்கள், விவசாயிகள் மற்றும் தனியார் துறையினர் போக்குவரத்தை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஜ-110)

# தேர்தல் காலங்களில் உருவெடுக்கும் பூதம்

### உலமா கட்சியின் கண்டுபிடிப்பு


அம்பாறை,ஏப்.14
**தேர்தல்கள் வருகின்றபோது, கல்முனையில் பூதத்தை எழுப்பி விடுவார்கள். இந்தப் பூதத்தை தமிழ் அரசியல்வாதிகளும், முஸ்லிம் அரசியல்வாதிகளும் சேர்ந்து எழுப்புகின்றார்களா? என்ற கேள்வி எங்களிடையே நிலவுகின்றது.**

இவ்வாறு உலமாக் கட்சியின் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார். உலமாக் கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதா வது,
கடந்த தேர்தல் காலங்களில், சிலர் கல்முனைப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துகின்றோம் என்று பேசிவிட்டு இப்போது மௌனமாக இருக்கின்றனர். கருணா என்பவரும் தற்போதைய பிரதமருக்கு நெருக்கமானவராக இருக்கின்றார். அதேபோன்று கல்முனைக்குச் சார்பான ஹரீஸ் என்பவரும் அரசுக்குச் சார்பாக உள்ளார்.
இவ்விருவரும் இணைந்து பிரதமரைச் சந்தித்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாதா?. இந்த விடயத்தை மீண்டும் முன்னிலைப்படுத்தி, தமிழ் முஸ்லிம் உறவுகளைச் சீர்குலைக்க வேண்டாம்.
கல்முனைப் பிரதேச செயலகப் பிரச்சினைக்கு விடுதலைப்புலிகளும் ஒரு காரணமாகும்.
வடக்கு, கிழக்கில் அவர்கள் கோலோச்சிய காலத்தில், தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்த பிரதேச செயலகத்தை இவ்வாறு பிரித்திருக்க மாட்டார்கள். ஆனால் புலிகள் முஸ்லிம் மக்கள் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டு தமிழர், முஸ்லிம்களை நிரந்திரமாகப் பிரிப்பதற்காகவே இவ்வாறு செயற்பட்டார்கள்- என்றார். (ப-4)

## ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய தேர் இன்று

கொடிகாமம், ஏப். 14
சாவகச்சேரி, நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. தொடர்ந்து நாளை வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.
ஆலயத்துக்கு வருகை தரும் அடியார்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வழிபாட்டில் கலந்து கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-159)

## புதையல் தோண்டியோர் பிணையில் விடுதலை



முல்லைத்தீவு,ஏப்.14
புதையல் தோண்டினர் என்ற குற்றச்சாட்டில் கைதான இருவர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.
முல்லைத்தீவு, புதுமாத்தளன் பகுதியில் கடந்த சனிக்கிழமை புதையல் தோண்ட முற்பட்டபோது பொலிஸாரால் இருவர் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதன்போது இருவரையும் பிணையில் விடுவித்ததுடன், குறித்த வழக்கு தொடர்பான விசாரணை எதிர்வரும் 27 ஆம் திகதி எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.
தெற்கைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரும், புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த ஒருவருமே இவ்வாறு புதையல் தோண்ட முற்பட்டனர் என்ற சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டவர்களாவர். (ஜ-19)



தென்மராட்சி மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயத்தின் பங்குனித் திங்கள் பூசை நிகழ்வுகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றன. இதில் யாழ். மாநகரசபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் இறைவழிபாட்டில் கலந்து கொண்டார். (ச-159)



## சிங்கள பயிற்சிநெறியை 43 பேர் நிறைவு செய்தனர்

கிளிநொச்சி, ஏப்.14
கிளிநொச்சியில் அமைந்துள்ள வடக்கு மாகாண மொழிப் பயிற்சி நிலையத்தில் 2021ஆம் ஆண்டுக்கான இரண்டாம் மொழி சிங்கள பயிற்சியை பூர்த்தி செய்து 6ஆவது அணியிலிருந்து 43பேர் வெளியேறியுள்ளனர்.
150 மணித்தியாலங்களைக் கொண்ட குறித்த கற்கையானது அரச கரும மொழிகளை அனைத்து அரச ஊழியர்களுக்கும் வழங்கும் வகையில் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் இவ்வாண்டில் 150 மணித்தியால கற்கையை முடித்து 6ஆவது அணி வெளியேறியுள்ளது. அதன் இறுதி நாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் இடம்பெற்றன. இதன்போது சிங்கள கலை கலாசார விழுமியங்களை அடியொற்றிய வகையில் நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ச-6)

## கால்நடைகளை விற்க அனுமதி தரவேண்டும்

### மாந்தை கிழக்கு பண்ணையாளர் கோரிக்கை

முல்லைத்தீவு, ஏப். 14
முல்லைத்தீவு மாந்தை கிழக்கில் கால்நடை வளர்ப்பாளர்களால் பராமரிக்கப்பட்டு, மேற்கொண்டு உகந்தது அல்ல என்று கழிக்கப்படும் கால்நடைகளை விற்பனை செய்வதற்கு மாவட்டச் செயலாளர் அனுமதி தர வேண்டும் என மாந்தை கிழக்கின் கால்நடை வளர்ப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;
மாந்தை கிழக்கில் பெருமளவு கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. இவற்றில் கால்நடை வளர்ப்பாளர்களால் மேற்கொண்டு பயன்பெற இயலாதெனக் கழிக்கப்படுகின்ற கால்நடைகளை விற்பனை செய்ய முடியாத நிலைமை காணப்படுகின்றது. இக்கால்நடைகளை கால்நடை மருத்துவ அதிகாரிகள் மூலம் பார்வையிட்டு விற்பனை செய்வதற்கான அனுமதியை மாவட்டச் செயலாளர் பெற்றுத் தர வேண்டும். அதிகாரிகளே கழிவு கால்நடைகளை வெளியில் கொண்டு செல்வதற்கான அனுமதிகளை வழங்க வேண்டும். கால்நடை வளர்ப்பாளர்களால் நீண்ட காலமாகப் பராமரிக்கப்பட்டு, கழிக்கப்படுகின்ற கால்நடைகளை விற்பனை செய்ய முடியாத நிலைமை மாந்தை கிழக்கில் காணப்படுகின்றது என்றனர்.
கடந்த 7ஆம் திகதி நடைபெற்ற வவுனிக்குளம் சிறுபோகக் கூட்டத்திலும் இவ்விடயம் ஆராயப்பட்டது. குறித்த விடயம் மாவட்டச் செயலாளருக்கு தெரியப்படுத்தி மேலதிக நடவடிக்கைகள் எடுப்பது என அந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ப-13)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொழும்புத் துறைமுக நகரத்தில் ஒரே நாடு ஒரே சட்டம் எங்கே போனது?

## தேசியவாதிகளை நோக்கி கேள்வி எழுப்புகிறது முன்னிலை சோசலிச கட்சி

**கொழும்பு, ஏப். 14**

**இலங்கையின் சட்டங்களுக்குப் புறம்பாக உள்ளன எனத் தெரிவித்து ஈழம் மற்றும் முஸ்லிம்களின் விவாகச் சட்டம் என்பனவற்றுக்கு எதிராகக் குரல் எழுப்புவோர், கொழும்பில் துறைமுக நகரத்துக்கு தனியான சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்போது மாத்திரம் அமைதி காப்பது ஏன்?**



இவ்வாறு முன்னிலை சோசலிசக் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் துமிந்த நாகமுவ கேள்வி எழுப்பியுள்ளார். கொழும்பிலுள்ள அந்தக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக்குள் மற்றொரு நாட்டை உருவாக்கும் வகையில் கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு உருவாக்கப்படவுள்ளது. இதற்கான சட்டவரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வர்த்தமானியிலும் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் பூகோளத்தை மாற்றிய மைத்து ஓர் நகரம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சுற்றாடல் அழிப்புக்கு எதிராக கடந்த காலங்களில் போராட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. இப்போது தனியாக உருவாக்கப்பட்ட நகரத்தை நிர்வகிப்ப தற்கு தனியான ஆணைக்குழு அமைப்பதற்கான சட்டவரைவை அமைச்சரவை அனுமதித்து நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளது.

இந்த ஆணைக்குழுவுக்கு 7 பேர் நியமிக்கப்படவுள்ளனர். மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சு உள்ளிட்ட பிரதான முக்கிய நிறுவனங்கள் இதில் உள்ளீர்க்கப்படவில்லை.

இலங்கையின் பொதுச் சட்டம் பிரயோகிக்கப் படாத அல்லது பின்பற்றப்படாத ஓர் இடமாக துறைமுக நகரம் விளங்கப் போகின்றது.

ஒரே நாடு ஒரே சட்டம் எனத் தெரிவித்து தேசவழமைச் சட்டம் மற்றும் முஸ்லிம் விவாகச் சட்டம் என்பனவற்றுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. ஆனால் இலங்கையின் பொருளாதாரக் கொள்கையை முற்றிலுமாகச் சிதைத்து அமைக்கப்பட்டுள்ள துறைமுக நகரம் தொடர்பில் மௌன மாக இருக்கின்றனர்.

இதனை நிதி நகரம் என்று கூறினாலும், கறுப்புப் பணத்தை வெள்ளையாக்கும் நடவடிக்கையே இங்கு நடக்கவுள்ளது- என்றார். (ஒ.இ.319)

## இளைஞர்கள் நால்வர் கைது

கொழும்பு,ஏப்.14

தெற்கு அதிவேக வீதியில் கட்டுப்பாடுகளை மீறிப் பயணித்த குற்றச்சாட்டில், இளைஞர்கள் நால்வர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

அதிவேக வீதிப் பாதுகாப்புப் பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ப-4)

விற்பனைக்குண்டு
ஊர்முட்டை - 20/=
ஊர்ச்சேவல் - 700/=
விற்பனைக்கு உண்டு.
077 485 7700

# மதபோதகர்கள் நுழைந்ததால் யூனியன் கல்லூரியில் பதற்றம்

யாழ்ப்பாணம், ஏப்.14

தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்குச் சொந்தமானது என்று கூறப்படும் காணிக்குள் அமெரிக்க மிசனரி போதகர்கள் சென்றதை அடுத்து நேற்று இரவு அங்கு பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

அந்தக் காணிக்குள் நேற்று மாலை முதல் இரு போதகர்களும், உதவியாளர் ஒருவரும் தங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்து நேற்றிரவு 9 மணியளவில் அங்கு பழைய மாணவர்கள் சென்றனர். அங்கிருந்த மதபோதகர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

அதையடுத்து அங்கு தெல்லிப்பழை பொலிஸார் சென்று நிலைமையைக் கட்டுப்படுத்தினர். இந்த விடயம் தொடர்பில் நீதிமன்றத்தின் ஊடாக தீர்வைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்திய பொலிஸார், மத போதகர்களையும் அங்கிருந்து வெளியேற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 9ஆம் திகதி தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்குள் புகுந்த கும்பல் ஒன்று மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியதில் மாணவர்கள் காயமடைந்தனர். அந்தக் குழு கல்லூரியின் அதிபர் விடுதியை கையகப்படுத்தவும் முயன்றது. அதனால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

mஅமெரிக்க மிசன் தேவாலயத்தைச் சேர்ந்தவர்களே தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்படும் நிலையில், இந்த விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இந்தநிலையில் நேற்று அங்கு மதபோதகர்கள் சென்றதால் பதற்ற நிலைமை ஏற்பட்டது. (ஏ26)


# காணவில்லை




அரியாலையைச் சேர்ந்த சந்திரபோஸ் லக்சிகா (வயது 23) என்பவரை கடந்த 06.04.2021 ஆம் திகதியிலிருந்து காணவில்லை. கண்டவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**கணவன்- சந்திரபோஸ்**
**074 058 3622**
**075 650 9725**

## மரண அறிவித்தல்

### மொழிஞாயிறு

### K.C.சிவசுப்பிரமணியம்



பிறப்பு 08.02.1944
இறப்பு 13.04.2021

கந்தமுருகேசனார் வீதி, புலோலி தெற்கு புலோலியை பிறப்பிடமாகவும், புலோலி மற்றும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட க.சி.சிவசுப்பிரமணியம் (ஆங்கில விரிவுரையாளர்) நேற்று (13.04.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி உமையாள் தம்பதியரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நாகம்மாவின் (ஆங்கில ஆசிரியர்) அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற யோகதர்சினி மற்றும் பிரியதர்சினி (இருதய வைத்தியநிபுணர் (U.S.A) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீகணேசின் (பொறியியலாளர்-USA) அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சிவபாதசுந்தரம், தர்மலிங்கம் மற்றும் தங்கம்மா, சிவமலர், ஆகியோரின் மைத்துனரும், அபிராம், ஸ்ரீசுகன், ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (13.04.2021) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 03 . 1944



மறைவு 13 . 04 . 2021

### தெய்வநாயகி சோமசுந்தரம்

வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடியை பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வநாயகி சோமசுந்தரம் நேற்று (13.04.2021) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன் மற்றும் சிவகாமி அம்மை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற முத்தையா சோமசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், சிவாஞ்சலி (கனடா), சண்முகானந்தன் (பிரதிப் பிரதம செயலாளர், பொறியியல் சேவைகள் வ.மா) சண்முகாஞ்சலி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆதித்தன் (கனடா), சிவப்பிரியா, கருணாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், துவாரகன் (கனடா), அஜந்திகா (லண்டன்) நிஷேவிதா, தக்ஷாயன் ஆகியோரின் பேர்த்தியும், தையல்நாயகி, வள்ளிநாயகி, ரங்கநாயகி, சிவலோக நாயகி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (14.04. 2021) புதன்கிழமை பி.ப 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**0777 158 570**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுவேலி மருத்துவமனையில் ஐந்து பேர் தனிமைப்படுத்தலில்

யாழ்ப்பாணம், ஏப்.14

சிகிச்சை பெற்ற நோயாளி ஒருவருக்கு அன்டிஜென் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து, அச்சுவேலி பிரதேச வைத்திய சாலையில் ஐவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அந்த நோயாளிக்கு மருத்துவர், தாதியர் மற்றும் ஊழியர் என ஐவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ள னர். அச்சுவேலி பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நோயாளி ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவருக்கு அங்கு துரித அன்ரிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் அவருக்குக் கொரோனாத் தொற்று உள்ளது எனத் தெரியவந்தது. அதையடுத்து அவருக்குப் பி.சி.ஆர்.சோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த நோயாளிகளுக்கு அச்சுவேலி பிரதேச மருத்துவமனையில் சிகிச்சையளித்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### அதியுச்ச....

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்கள் பல துன்பங்களுக்கு மத்தியில் சித்திரைப் புத்தாண்டை வரவேற்கின்றார்கள். என்னதான் துன்பங்கள், இடையூறுகள் வந்தாலும் மக்கள் தங்கள் நம்பிக்கையை இழக்கக்கூடாது. இந்த நாடு தொடர்ந்து தற்போதைய பாதையில் செல்ல முடியாது. தற்போதைய பாதை பேராபத்து மிக்கது.

நாட்டில் உண்மையான நல்லிணக்கம் ஏற்படக்கூடிய வகையில் தேசிய பிரச்சினையான அரசியல் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த அநீதிகளுக்கு அரசு பொறுப்புக்கூறியே ஆக வேண்டும். அந்தக் கடமையிலிருந்து அரசு விலகக்கூடாது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நல்லுறவுகளை அரசு பேண வேண்டும். இவையெல்லாம் தவிர்க்க முடியாத கருமங்களாகும்.

உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் கொடுத்த பல வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் அரசு இன்று தத்தளிக்கின்றது. இது நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லதல்ல. விசேடமாக இந்த ஆட்சிக்கு உகந்ததல்ல.

தமிழர்களாகிய நாங்கள் நாட்டைப் பிரித்துத்தருமாறு கோரவில்லை. பிளவுபடாத ஒருமித்த நாட்டுக்குள் போதிய அதியுச்ச அதிகாரப் பகிர்வு ஏற்படுத்தப்பட்டு எங்கள் இறைமையை நாங்கள், சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழர்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்த பிரதேசங்களில் பயன்படுத்த வேண்டும். அதுதான் எங்களுடைய கோரிக்கை.

உலகத்தில் பல்வேறு நாடுகளில் இவ்விதமான நிலைமை இருக்கின்றது. இந்த நிலைமை எமது பிரதேசங்களிலும் ஏற்பட வேண்டும் என்றே நாங்கள் கேட்கின்றோம். இதற்காக நாங்கள் கடுமையாக உழைப்போம். உழைத்துக்கொண்டிருக்கின்றோம். இந்த நோக்கம் நிறைவேறும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது என்றார். (எ-22)

### மழைக்கு...

முத்தத் தாழ்வு நிலை காணப்படுவதால் மாலை நேரங்களில் இடியுடன் கூடிய மழை செய்வதற்கு சாத்தியம் உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இடியுடன் மழை பெய்யும் சாத்தியங்கள் உள்ளதால், மக்கள் மின்னல் தாக்கம் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார். (எ-ய-20)

### ஜனாதிபதி...

அவர் ஏகாதிபத்திய ஆட்சியை முன்னெடுப்பார் என்று மக்கள் எதிர்ப்பார்த்தனர். குறிப்பாக அவர் ஹிட்லரானால்கூட பரவாயில்லை என்று மகாநாயக்க தேரர்கள் கடந்த காலங்களில் கருத்து வெளியிட்டிருந்தனர். எனவே, தற்போது ஹிட்லர் போல் ஜனாதிபதி செயற்படாததால்தான் விமர்சனங்கள் எழுந்துள்ளன. நானும் அதனை ஏற்கின்றேன். ஏனெனில் ஜனாதிபதி ஏதோவொரு விதத்தில் ஹிட்லர்போல் செயற்படவேண்டும் என்பதையே அவருக்கு வாக்களித்த 69 லட்சம் பேர் எதிர்பார்க்கின்றனர்.

ஒரேடியாக ஹிட்லராக மாறுவதற்கு ஜனாதிபதி விரும்பவில்லை. ஆனாலும் ஒரு சில துறைகளின் செயற்பாடுகள் அவரை ஹிட்லர் என்ற நிலைக்கு தள்ளினால் ஹிட்லராகவும் மாறக்கூடும். அப்போது எவரும் விமர்சிக்க மாட்டார்கள். நடவடிக்கைகள் உரிய வகையில் இடம்பெறும் என்றார். (ஒ,44)

### பழிவாங்கும்...

கான செயற்றிட்டம் தயாரித்துள்ளது. எம்மீது தேவையற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கும் எம்மை விமர்சிப்பதற்கும் யஸ்மின் சூக்கா தலைமையிலான சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்ட அமைப்பினருக்கு எந்த அருகதையும் இல்லை.

இவ்வாறு இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

சவேந்திர சில்வாவின் குற்றங்கள் தொடர்பான 50 பக்க ஆவணம் பிரிட்டனிடம், சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்ட அமைப்பால் கையளிக்கப்பட்டது. இது தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இறுதிப் போரில் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களில் நானும் சக இராணுவத்தினரும் ஈடுபடவில்லை. நாம் மனிதாபிமான நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டோம்.

விடுதலைப்புலிகளின் பிடியில் சிக்கியிருந்த பொதுமக்களை மீட்டெடுத்தோம். அப்போது விடுதலைப் புலிகளின் பல்வேறு விதமான தாக்குதல்களில் பொதுமக்கள் பலர் இறந்தும் உள்ளனர். காயமடைந்தும் உள்ளனர். எனினும், பல்லாயிரக்கணக்கான பொதுமக்களை மீட்டெடுக்கும் நடவடிக்கையை இறுதி வரை முன்னெடுத்தோம்.

என்மீதும் சக இராணுவத்தினர்மீதும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை அடியோடு நிராகரிக்கின்றேன்.

எம்மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ள அமைப்பு, புலம்பெயர் புலி ஆதரவாளர்களின் பின்னணியில் செயற்படுகின்றது. இறுதிப் போர் நிறைவடைந்தது முதல் இற்றை வரைக்கும் இப்படியான சில அமைப்புகள், இலங்கை இராணுவத்தினரைத் திட்டமிட்டுப் பழிவாங்கும் வகையில் இராணுவத்தினருக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் சர்வதேச ரீதியில் செயற்படுகின்றன.

இதற்கெல்லாம் நாம் அஞ்சமாட்டோம். அடிபணியமாட்டோம். நாட்டின் சட்டங்களை மதித்து அனைத்து இன மக்களும் ஒரு தாய் பிள்ளைகள் என நேசித்து நாம் செயற்படுகின்றோம் என்றார். (ஒ-22)

### விபத்தில்...

முன்தினம் இரவு சாவகச்சேரி நகரப் பகுதி வீதி வளைவில் நடந்துள்ளது. கிளிநொச்சி அக்கராயன்குளம் பகுதியைச் சேர்ந்த ஜோன் மனோகரன் கெவின் கிருஷ்ணகுமார் (வயது-32) என்னும் குடும்பத்தலைவரே உயிரிழந்தவராவார். யாழ்ப்பாணத்தில் வேலை செய்துவிட்டு, பொருள்களுடன் வீடு திரும்பிய வேளையில் இந்த துயரச் சம்பவம் நடந்துள்ளது. இவரது சடலம் சாவகச்சேரி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ப-9)

### நல்லூரில்...

யில்,அவரது உடலில் இருந்து மாதிரிகள் பெறப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் முடிவுகள் நேற்று வந்த நிலையில் அவருக்குத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த உயிரிழப்புடன் யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்துள்ளது. (எ-26)

### புத்தாண்டு...

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் சிங்கள புத்தாண்டுக் கொண்டாட்டங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படவில்லை. ஆனால் மக்கள் தற்போது நிலைமைகளை உணர்ந்து செயற்பட வேண்டும். வடக்கு மாகாணத்தின் பல பாகங்களிலும் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனாத் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

புத்தாண்டுக் கொண்டாட்டங்களின் போது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும். சமூக இடைவெளி, மாஸ்க் அணிதல் மற்றும் அடிக்கடி கைகளைக் கழுவுதல் போன்ற அடிப்படை சுகாதார நடைமுறைகளை அனைவரும் தத்தமது பொறுப்புணர்ந்து பின்பற்றுதல் வேண்டும் - என்றார். (ஒ,5)

### வடமாகாணத்தில்...

நேற்று 429 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

யாழ்ப்பாணம் மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 11 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 10 பேர் சுயதனிமைப்படுத்தலில் இருந்தவர்கள். சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு, சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு மற்றும் பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு ஆகியவற்றில் தலா ஒருவர் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டிருந்த 3 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவுக்குத் தொற்று அறிகுறிகளுடன் வந்த ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் தலா ஒருவர் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்கள் ஏற்கனவே தொற்றுடன் இனங்காணப்பட்டவர்களுடன் நேரடித் தொடர்பில் இருந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-26)

### அரசியல்வாதிகள்...

அதில் உள்ளதாவது

ஹிட்லர் ஒருவர் இருந்தால் இலங்கையும் பயனடைய முடியும் என்ற விதத்திலான கருத்துக்கள் எனக்குக் கேட்கின்றன. கற்பனைகளுக்கு அப்பால் மில்லியன் கணக்கான மரணங்களுக்கும் மக்களின் துன்பங்களுக்கும் பொறுப்பானவரே, அடொல்ப் ஹிட்லர் என்பதை நான் நினைவுகூர்கின்றேன்.

நிச்சயமாக அவர் எந்தவொரு அரசியல்வாதிக்கும் முன்மாதிரியானவர் அல்லர் என்றுள்ளது.

கண்டியில் உரையாற்றியிருந்த போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுக, தேவை ஏற்பட்டால் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஹிட்லராக மாறுவார் என்று தெரிவித்திருந்தார். அதற்குப் பதலளிக்கும் வகையிலேயே ஜேர்மனியின் தூதுவர் ஹோல்கர் செயுபேர்ட் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (எ-22)

### விகிதாசார...

மொழியப்பட்ட முறைமையின் கீழ் அரசியல் கட்சியால் ஒரு தொகுதியில் மூன்று வேட்பாளர்களைப் பரிந்துரைக்க முடியும் என்று தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது

ஒரு குறிப்பிட்ட தொகுதியில் அரசியல் கட்சி ஒன்றில் ஒரு வேட்பாளர் மட்டும் இருந்தால், அந்த வாக்காளர் மக்கள் மத்தியில் கெட்ட பெயரைப் பெற்றிருந்தால் வாக்காளர்கள் வாக்களிப்பதைப் புறக்கணிக்கும் வாய்ப்பு உள்ளது. இது அந்த வேட்பாளரை போட்டியிட வைக்கும் கட்சிக்குப் பாதகமாக அமையும்.

வாக்காளர்கள் தங்களுக்குப் பொறுப்புக்கூறும் ஒரு உறுப்பினரையே எதிர்பார்க்கின்றனர். எங்களால் முன்மொழியப்பட்ட முறைமையின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட 3 பேரில் ஒருவருக்கு மக்கள் வாக்களிக்க முடியும்.என்றார்.

அதேவேளை, மாகாண சபைத் தேர்தலுக்கான திகதி இன்னமும் அரசால் தீர்மானிக்கப்படவில்லை. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதாரம் 2021 ஆம் ஆண்டுக்குள் மீளும்

## பிரதமர் நம்பிக்கை



**கொழும்பு,ஏப்.14**

**கொரோனாத் தொற்றால் இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரம், புத்துயிர் பெறுவதற்கான அறிகுறிகள் ஏற்பட்டுள்ளன. அதனால் இந்த ஆண்டு முடிவடைவதற்குள் நாட்டின் பொருளாதாரம் சரியான பாதையில் செல்லும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

அதேவேளை இலங்கையின் பொருளாதாரம், 2021 ஆம் ஆண்டில் மீட்டெடுக்கப்படும் என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு முதலீடுகள், சுற்றுலாத்துறை மற்றும் பிற பொருளாதார நடவடிக்கைகளை இயல்பாக்குவதன் மூலம், இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 2021 ஆம் ஆண்டில் 3.4 சதவீதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும் மெதுவான உலகளாவிய மீட்சி, தொடர்ச்சியான வர்த்தகக் கட்டுப்பாடுகள், பொருளாதார வடுக்கள் மற்றும் அதிக கடன் சுமை ஆகியவை தொடர்ந்து பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கக்கூடும் என்றும் உலக வங்கி தெரிவித்துள்ளது. (ப-4)

# 1913 இலக்க துரித சேவை இடை நிறுத்தம்

மதுவரித் திணைக்களச் செயற்பாட்டு மையத்தின் 1913 எனும் இலக்கத்துடனான துரித சேவை 14 நாள்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளது. எனினும் மக்கள் தகவல்களை வழங்குவதற்கு, வேறு சில தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

மதுவரித் திணைக்களத்துக்குச் சொந்தமான இராஜகிரிய கோட்டை வீதியில் அமைந்துள்ள மதுவரித் திணைக்கள தலைமையகத்தின் உத்தியோகத்தர்கள் சிலருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் அங்கு பணியாற்றிய ஊழியர்கள் யாவரும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அதனால் செயற்பாட்டு மையம் மூடப்பட்டுள்ளது. எனவே 071 63 45 291, 071 310 85 07 மற்றும் 071 812 23 33 ஆகிய இலக்கங்களினூடாக மக்கள் தொடர்புகளை மேற்கொள்ள முடியும் என்று மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(ப-4)

# வர்த்தமானிக்குத் தடைகோரி உயர் நீதிமன்றுக்கு மனுக்கள்

கொழும்பு,ஏப்.14

அடிப்படைவாதச் செயற்பாடுகள் தொடர்பாகச் சரணடையும் அல்லது கைது செய்யப்படும் நபர்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் சட்ட விதிகள் உள்ளடக்கப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு, தடை விதிக்கக்கோரி உயர் நீதிமன்றில் 5 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட வர்த்தமானி அறிவிப்பு, அரசமைப்பின் 3 ஆவது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறுவதாக அமைந்துள்ளன என்று கூறியே இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த மனுக்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளர்களில் ஒருவரான அம்பிகா சற்குணநாதன் மற்றும் அப்துல் ஜவாத் இன்சாப், அப்துல் வஹாப் ஹில்மி அஹமட் மற்றும் பாத்திமா சில்மா மொஹிதீன் அஹமட், எம்.எல்.நௌபர் அமீர் ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. குறிப்பிட்ட மனுக்களில் பாதுகாப்புச் செயலாளர், புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம், பொலிஸ் மா அதிபர், சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட வர்த்தமானி அறவிப்பு, கடந்த மார்ச் மாதம் 12 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

(ப-4-319)

**வேலையாள்கள் தேவை**

**வெல்டிங்** வேலை தெரிந்த வேலையாள்கள் தேவை.

077 226 9950, 077 905 0186

# நடந்து சென்றவர்களை மோதித் தள்ளியது பஸ்

## ஒருவர் சாவு; மற்றொருவர் காயம்

ஹற்றன். ஏப். 14

ஹற்றன் நகரை நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ், கட்டுப்பாட்டை இழந்து, அதே பக்கத்தில் நடந்து சென்றவர்களை மோதித் தள்ளியது. அதில் இளம் குடும்பஸ்த்தர் ஒருவர் உயிரிழந்தார். பெண்ணொருவர் காயமடைந்தார்.

இந்த விபத்து ஹற்றன் ரயில் நிலையத்துக்கு முன்னால் உள்ள மஞ்சள் கோட்டுக்கு அருகில் நேற்று முன்தினம் நடந்துள்ளது.

பஸ்ஸால் மோதுண்ட நபர், வீதியில் சென்ற பெண்ணுடன் மோதி, நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கர வண்டியுடனும் மோதுண்டு, மீண்டும் வீதியின் பக்கம் வீழ்ந்தார் என்று விபத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

காயமடைந்த இருவரையும் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் போது, ஆண் உயிரிழந்துள்ளார். பெண் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார்.

பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-4)

# கொழும்பில் தொற்றாளர்கள் அதிகரிப்பு

கொழும்பு,ஏப்.14

இலங்கையில் கடந்த12ஆம் திகதி கண்டறியப்பட்ட தொற்றாளர்களில், அதிக அளவிலானவர்கள் கொழும்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் 67 பேருக்கும், குருநாகலில் 27 பேருக்கும், கேகாலையில் 22 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் கம்பஹாவில் 20 பேருக்கும், இரத்தினபுரியில் 18 பேருக்கும், மட்டக்களப்பில் 12 பேருக்கும், கண்டியில் 11 பேருக்கும், புத்தளம் மற்றும் யாழ்ப்பாணத்தில் தலா 10 பேருக்கும், மாத்தளையில் 9 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை களுத்துறை மற்றும் முல்லைத்தீவில் தலா 6 பேருக்கும், அம்பாறையில் நால்வருக்கும், ஹம்பாந்தோட்டையில் இருவருக்கும், பொலன்னறுவையில் ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் வெளிநாடுகளில் இருந்த நாடு திரும்பிய 38 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

(ப-4)

**மரண அறிவித்தல்**

தோற்றம் 19 . 11 . 1952



மறைவு 13 . 04 . 2021

**திரு. கந்தையா பாலச்சந்திரன்**

(ஓய்வுநிலை மக்கள் வங்கி முகாமையாளர் )

அல்லாரையைப் பிறப்பிடமாகவும், கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுநிலை மக்கள் வங்கி முகாமையாளர் திரு. கந்தையா பாலச்சந்திரன் அவர்கள் நேற்று (13.04.2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை கந்தையா மற்றும் கந்தையா பாறுவதிப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற செல்லையா சடாச்சரம் சடாச்சரம் நவமணி தம்பதியரின் அன்பு மருமகனும், வாசுகிதேவியின் அன்புக் கணவரும், குகனேசன், குகதாசன், காலஞ்சென்ற புவிராஜசிங்கம், இன்பலதா, இன்பராணி, குகேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிருபராஜ், பாலஇளந்திரையன், இளங்கோவன், ஆர்த்திகா மற்றும் சிறீபவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நி.லாகினி, பா.சுபாஷினி, இ.கபிலி மற்றும் கிஷோக்குமார் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நி.அனேத்திரா, நி.தட்சகன், பா.ஆத்மிகா ஆகியோரின் அன்பு அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (14.04.2021) புதன்கிழமை அஞ்சலிக்காக அவரது கொடிகாமம் வதிவிடத்தில் வைக்கப்பட்டு, நாளை (15.04.2021) வியாழக்கிழமை இறுதிக்கிரியைகளுக்காக கொடிகாமம் பாலாவித்தாள் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ... கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14. 04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.